Registered as a Newspaper    பக்கங்கள் 10

விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    PEOPLES DAILY


நாதம் 5    திருவள்ளுவர் ஆண்டு 2025    ஐப்பசி 16    02-11-94    புதன்கிழமை    ஓசை 257

## மலேரியா நோயைப் பரப்பும் புதியவகை நுளம்பு கண்டுபிடிப்பு

யாழ் குடாநாட்டில் மலேரியாவைப் பரப்பும் புதியவகை நுளம்பொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகள் தெரிவிக்கின்றன. கடந்த காலங்களில் அனோபிலிஸ் குயுலசிஸ் என்னும் இனம் மாத்திரமே மலேரியாவை பரப்புவதாக கருதப்பட்டது. எனினும் தற்போது அனோபிலிஸ் சப்பிக்ரஸ் என்னும் இப்புதிய வகையான நுளம்பும் மலேரியாவை உண்டுபண்ணுவதாக அவ்வாய்வு மேலும் தெரிவித்துள்ளது. மேற்படி புதிய வகை நுளம்பு மலத்தியோனுக்கும் (10 ஆம் பக்கம் பார்க்க)

# அனாதரவான சிறார்களை தமிழீழத்தின் தலைவர்கள் ஆக்குவதே எமது குறிக்கோள்

## காந்தரூபன் அறிவுச் சோலை ஓராண்டு பூர்த்தி குறித்து தலைவர் பிரபா



எதிரியின் அழிப்பு வேலைகளுக்கு மத்தியில் நாம் ஆக்க வேலைகளை செய்து வருகிறோம். போர்ச்சூழலால் குடும்பம் சிதைந்து, அனாதரவான நிலைக்கு ஆளாகும் சிறார்களை எமது இயக்கம் அரவணைத்துக் கொள்கிறது. அவர்களை சிறந்த முறையில் வளர்த்தெடுக்க பராமரிப்பு இல்லங்களையும் பயிற்சிப் பள்ளிகளையும் நடத்தி வருகிறது. தமிழீழத்தின் எதிர்காலத் தலைவர்களாக, அறிவு ஜீவிகளாக, சமூக நிர்மாணிகளாக இவர்களை வளர்த்தெடுப்பதே எமது நோக்கம்.

இவ்வாறு காந்தரூபன் அறிவுச் சோலை முதலாம் ஆண்டு நிறைவு விழாவை யொட்டி தலைவர் பிரபாகரன் வழங்கிய வாழ்த்துச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அச் செய்தியினை இங்கே முழுமையாகத் தருகிறோம்.

போராட்டப் புயல் வீசும் எமது மண்ணில் வேரோட்டம் விட்டு விரைவான வளர்ச்சியை கண்டுவரும் எமது அமைப்புகளில் ஒன்று காந்தரூபன் அறிவுச்சோலை. இந்தச் சோலையிலுள்ள இளம் செடிகள் துளிர்த்து, பூத்து, காய்த்து, செழித்து வளர்வதைக்காண எனது நெஞ்சம் நிறைகிறது.

முழுமையான மனிதர்களை உருவாக்கும் புதுமையான பரிசோதனைக் களமாக காந்தரூபன் அறிவுச்சோலை அமையவேண்டும் என்பது எனது ஆவல். இளமையிலிருந்து தான் முழுமையை வளர்க்க முடியும். முழுமை எனும் பொழுது அறிவும், ஆற்றலும், அறநெறிப் பண்புகளும் கொண்ட நிறைவான மனிதவளர்ச்சியையே குறிப்பிடுகிறேன். (10-ம்பக்கம்பார்க்க)

### காமினி கொலை குறித்த விசாரணை

# இந்தியப் புலனாய்வுத்துறை உதவிகோர அரசாங்கம் முடிவு

## அமைச்சரவையில் நேற்று தீர்மானம்

(கொழும்பு)

முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசாநாயக்கா கொலை குறித்து புலன் விசாரணை நடத்த இந்திய புலனாய்வுத் துறையினரின் உதவியைக் கோருவதென சிறிலங்கா அரசு முடிவு செய்துள்ளது. இதுதொடர்பான தீர்மானம் நேற்றைய அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

காமினி கொலை தொடர்பாக ஆராய இந்திய புலனாய்வு பிரிவு பொலிசாரின் உதவியை நாடுமாறு காமினி திசாநாயக்காவின் மனைவியும் ஐ தே க ஜனாதிபதிவேட்பாளருமான திருமதி சிறிமா திசாநாயக்கா சிறிலங்காப் பிரதமர் சந்திரிகா குமாரதுங்கவை கடிதமூலம் கோரியிருந்தமை தெரிந்ததே இது குறித்து அமைச்சரவை இத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது

நேற்று கொழும்பில் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்க நடந்த செய்தியாளர் மாநாட்டில் இது குறித்து அமைச்சர் பீரிஸ் தெரிவிக்கையில் இது தொடர்பாக இந்திய அரசாங்கத்துக்கு விசேட புலனாய்வுக்குழுவை அனுப்பி வைக்குமாறு வேண்டுகோள் விடுக்கப்படுமெனவும், எந்த ஒரு நாட்டின் உதவியுடனும் சுதந்திர விசாரணைகளை மேற்கொள்ள அரசாங்கம் பின் நிற்கப்போவதில்லையெனவும் அவர் தெரிவித்துள்ளார்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு கவசங்களை அணியுமாறு அரசியல் தலைவர்களுக்கு அறிவுரை

அனைத்து அரசியல் தலைவர்களும் பாதுகாப்புப்படை உயரதிகாரிகளும் குண்டு துளைக்காத மார்பு கவசத்தை அணிந்து கொள்ள வேண்டும் என இராணுவ புலனாய்வுப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது

குறிப்பாக பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்ளும் அரசியல் தலைவர்கள் இக்கவசங்களை அணியுமாறு அப்பிரிவு கோரியுள்ளது

கொல்லப்பட்ட காமினி திசாநாயக்காவிற்கும் இது போன்ற அறிவுறுத்தல் வழங்கப்பட்டும் அதை அவர் ஏற்க மறுத்ததால் குண்டுவெடிப்பில் கொல்லப்படவேண்டிய நிலை ஏற்பட்டதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது

## அவசரகாலச்சட்டம்; கொழும்பில் நீடிக்க முடிவு

தென்னிலங்கையில் அவசரகாலச்சட்டம் காலாவதியாக விடப்பட்டுள்ளபோதிலும் தலைநகர் கொழும்பில் அவசரகாலச்சட்டம் தொடர்ந்து நீடிக்கும் என அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி எல். பீரிஸ் தெரிவித்தார்

குண்டுவெடிப்பு தொடர்பான விசாரணை தடங்கல் ஏதுமின்றி நடத்தப்பட கொழும்பில் அவசரகாலச் சட்டத்தை நீடிக்குமாறு பாதுகாப்பு படையினர் அரசைக் கேட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்

புலனாய்வில் முன்னேற்றம் ஏற்பட்டால் படையினருக்கு விசேட அதிகாரம் தேவை என்பதனால் இந் நடவடிக்கை எடுக்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது ஏனைய பகுதிகளில் எதிர்வரும் 4ஆம் திகதி முதல் அவசரகாலச் சட்டம் நீக்கப்படுகின்றது

## படகுச் சேவை

கிளாலி-பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறுமென அரசியற் துறையினர் அறிவித்துள்ளனர்.

## அதிரடிப்படை தாக்கியதில் ஒரு பொதுமகன் பலி

கடந்தமாதம் 26ஆம் திகதி 40 ஆம் கிராமத்தை நோக்கி வந்த விசேட அதிரடிப்படையினர் பதுங்கியிருந்து தாக்கியதில் ஒரு பொதுமகன் கொல்லப்பட்டார்.

33ஆம் கிராமத்தைச் சேர்ந்த முத்துபண்டா குமரேஸ் வரன் என்பவரே கொல்லப் பட்டவராவார்.

## ஜனாதிபதி தேர்தலின்பின் அமைச்சரவையில் மாற்றம்

(கொழும்பு)

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் எஸ். தொண்டமான் அடுத்த பதவிக்காலம் திகதி வரை மட்டுமே சுற்றுலா அமைச்சராகப்பதவி வகிப்பார் என அரசாங்க சிரேஷ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்ததும் அமைச்சரவையில் மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாகவும் இம் மாற்றத்தின் போது இவருக்கு வேறு அமைச்சு வழங்கப் படும் எனவும் சில அமைச்சர்கள் பதவி இழக்கலாம் எனவும் அப்பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

## தொண்டாவின் பா.உ. பதவி; விரைவில் முடிவெடுப்போம்

### ஐ. தே. க பொதுச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப் பட்டியல் மூலம் பாராளுமன்ற உறுப்பினரான எஸ். தொண்டமான், இப்போது பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்தில் இணைந்திருப்பதால் அவரது உறுப்புரிமை பற்றி சட்டரீதியாக பரிசீலனை செய்து பொருத்தமான முடிவு எடுக்கப்படுமென ஐ. தே. க பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோரள தெரிவித்துள்ளார்.

ரூபவாகினிக்கு நேற்று அவர் இத் தகவலை வெளியிட்டுள்ளார்.

### கடலை கொடுத்தபோது வாங்க மறுத்தார்

## சந்தேகத்துக்குரியவரின் அருகிலிருந்தவர் சாட்சியம்

(கொழும்பு)

பாலத்துறையில் குண்டு வெடிப்பு நடக்க முன்னர், குண்டை வெடிக்க வைத்தவர் எனக்கருதப்படும் பெண்ணுக்கு, அருகிலிருந்த சிங்களப் பெண் ஒருவர் சாப்பிடுமாறு கடலைகளை கொடுத்தபோது மேற்படி சந்தேகத்திற்குரிய பெண் அதனை ஏற்றுக் கொள்ளவில்லையாம்.

பம்பலப்பிட்டியைச் சேர்ந்த சிங்களப் பெண், பத்திரி (10 ஆம் பக்கம் பார்க்க)

தீபாவளி வாழ்த்துக்கள்

## பழுதடைந்த லக்ரோஜன் குடாநாட்டில் விற்பனை

### மருத்துவப் பிரிவினர் அறிவிப்பு

யாழ் குடாநாட்டில் விற்பனையாகிவரும் குழந்தைகளுக்கான 'லக்ரோஜன் பால் மா' அவர்களின் உடல் நலத்திற்கு ஊறு விளைக்கக் கூடியதாக அறியப்பட்டுள்ளது.

எனவே 1994 ஏப்பிரல் மாதம் தயாரிக்கப்பட்டதும் EEOAK குறியீட்டைக் கொண்ட பக்கட்டுகளிலுள்ள 'லக்ரோஜன்2 பால்மா'வைக் குழந்தைகள் பாதுகாப்புக் கருதி பாவனையாளர்கள் மிக அவதானத்துடன் கொள்வனவு செய்ய வேண்டுமெனவும் பால்மா விற்பனையாளர் பழுதடைந்த அல்லதுபூச்சிகள் தொற்றிய பால்மா வகைகளை எக்காரணம் கொண்டும் பொதுமக்களுக்கு விற்பனை செய்ய வேண்டாம் எனவும், தமிழீழ மருத்துவப் பிரிவின் துணைப் பொறுப்பாளர் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார்.

## கைதிகளை விடுவிக்கும் அரசின் முடிவில் மாற்றம்

இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் முகமாக தமிழ் அரசியல் கைதிகள் தொடர்பாக பிரதமர் சந்திரிகா தலைமையிலான அரசு எடுத்த முடிவுகளில் காமினி படுகொலையைத் தொடர்ந்து மாற்றம் ஏற்பட்டுள்ளது.

தடுப்புக்காவல் உத்தரவுகளை விலக்குவது என்றும் தகவல் கொடுக்க தவறியது, உணவு வழங்கியது போன்ற குற்றச்சாட்டுகளை விலக்குவது என்றும் ஆயுத பயிற்சி பெற்றவர்கள்மீது மட்டுமே வழக்கு தொடர்வது என்றும் புதிய அரசு முன்னதாக முடிவு செய்திருந்தது. ஆனால் அரசின் இம்முடிவில் இப்போது மாற்றம் ஏற்பட்டுள்ளது. வழக்குகளை வாபஸ் பெறுவதில்லை என சட்டமா அதிபர் திணைக்களம் முடிவு செய்துள்ளது.

## குண்டுவெடிப்பு தொடர்பாக மலையக இளைஞர் கைது

(கொழும்பு)

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக இரு மலையக இளைஞர்கள் கொழும்பில் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

இவர்களிடமிருந்து ஆயுதங்கள் சிலவும் மீட்கப்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# மட்டக்களப்பு மாவட்டத்தில் ராணுவம் பெரும் சுற்றிவளைப்பு

## இரு தினங்களில் பல பொதுமக்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டம் மாவடி முன்மாரிப் பிரதேசத்திலுள்ள கண்ணகிநகர், உன்னிச்சை, ஆயித்தியமலை, 19-ம் கட்டை, உறுகாமம் ஆகிய முகாம்களிலுள்ள இராணுவத்தினரும், கொக்கட்டிச்சோலை அம்பளாந்துறை 40-ம் கிராமம் தும்பங்கேணி புழுகுனாலி ஆகிய முகாம்களிலுள்ள விசேட அதிரடிப்படையினரும் இணைந்து கடந்த மாதம் 28-ந் திகதியன்று நெல்லிக்காடு, காலப்போட்டமடு. வந்தியமடு, கொக்கிலமலை, மீனாட்சிசேனை, நீறுபோட்டசேனை, காஞ்சிரன்குடா, தாண்டாமுனை ஆகிய பகுதிகளில் (10ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

**மிருதங்கம்**

புதிய மிருதங்கம் மற்றும் தபேலா, டோல்கி ஆகியவற்றை சிறந்த முறையில் குறித்த நேரத்தில் செய்து கொள்வதற்கு கோவிந்தபிள்ளை விஜயகுமார் 192/1 நாவலர் வீதி பெருமாள் கோவிலடி யாழ்ப்பாணம் (9828)

**விற்பனைக்கு**

F 10 வீடியோ கமரா, 180 டெக், றெமோட் கொன்றோல் சாஜ்ஜர் ஆகியன விற்பனைக்கு நல்ல நிலையில் உண்டு தொடர்பு யூ ட் போ ட் டோ 51 நான்காம் குறுக்குத்தெரு சின்னக்கடை. யாழ்ப்பாணம், (சி-10604)

**நுளம்புத்தொல்லையா?**

தூக்கம் கெட்டதா, நீம் சுகாதார தூபம், புகைத்து நிம்மதியாகநித்திரை கொள்ளுங்கள்: பக்கற் ஒன்றின் விலை. ரூ 2-50, 25 பக்கற் கொண்ட அட்டை ஒன்று ரூ. 50 ஆகவும் விலை குறைக்கப்பட்டுள்ளது. அண்ணா கோப்பிக்கடைகளிலும் விற்பனைக்குள்ளன, 'மிக்ஸைற்' (சி 10630)

**வியாழமாற்றம் தீபாவளி வெளியீடு**

வெளிவந்துவிட்டது வியாழ மாற்றம் எங்கும் விற்பனையாகின்றது. ரூ 10/- எல்லா ராசிகளின் பலன்கள் நூலாசிரியர்:- சத்யா கிடைக்குமிடம்:- சோபிதா, புத்தகசாலை, மகிமிலன் புத்தகசாலை, யாழ்ப்பாணம்- (9948)

**பெற்றுக் கொள்ளவும்**

பெண்கள் அணியும் கைக்கடிகாரம் ஒன்று பலாலி றோட்டில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. ஆதாரம் காட்டிப் பெறவும், தொடர்பு: ஸ்ரீ அம்பாள் ஸ்ரோர்ஸ் திருநெல்வேலிச் சந்தி, யாழ்ப்பாணம். (சி-10632)

**தவறிவிட்டது-**

சரவணபவானந்தன் என்பவருடைய க. பொ: த. உயர்தர Notes கொப்பிகள் 30 - 10 - 94 அன்று கல்வியங்காட்டுக்கும் இருபாலைக்கும் இடையில் தவறிவிட்டது: கண்டெடுத்தவர்கள் தயவு செய்து புத்தூர் அம்பாள் புடைவை அகம் அல்லது ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும் (9957)

### யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

## சிருடைகளைத் தைப்பதற்கான கூறுவிலை கோரல்

யாழ்ப்பாண மாநகரசபைப் பணியாளர்களுக்கு (கிட்டத்தட்ட 500 பேருக்கு) சிருடைகள் தைத்து (தையற்கூலி மட்டும்) வழங்குவதற்குரிய கூறுவிலைகள் கோரப்படுகின்றன.

தகுதி வாய்ந்த நிறுவனங்கள் மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணமாக ரூபா 100/- ஐ செலுத்தி 10-11-94 வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை யாழ். மாநகரசபையின் கொள்வனவுப் பகுதியில் உரிய கூறுவிலைப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கூறுவிலைப் படிவங்களைக் கொண்ட கடித உறைகள் அரக்கு முத்திரையிடப்பட்டு 11-11-94 வெள்ளிக்கிழமை நண்பகல் 12 00 மணிக்கு முன்னர் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் சேர்க்கப்படல் வேண்டும்.

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
01-11-1994 (சி-10633)

## வடபகுதி இளம்பெண் தாண்டிக்குளத்தில் கைது

(வவுனியா)

கொழும்பிலிருந்து வடபகுதிக்கு வந்த இளம் பெண் ஒருவர் தாண்டிக்குளத்தில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 26ஆம் திகதி சம்பவம் நடந்த... வங்காளின் படங்கள் அடங்கிய அல்பம் போன்ற சந்தேகத்திற்குரிய பொருள்களை அவர் தம்வசம் வைத்திருந்ததாக கூறப்படுகிறது.

## ஆறாம் ஆண்டு நீங்காத நினைவு அஞ்சலி



**லெப்டினன்ட் நந்தன்**
(கணபதிப்பிள்ளை லோகேஸ்வரன்)
முன்னை நாள் காரைநகர் பிரதேசப் பொறுப்பாளர்

| பிறப்பு: | வீரச்சாவு: |
| --- | --- |
| 03. 10. 1969 | 02. 11. 1988 |

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்-
குடும்பத்தினர்

523, அமால் வீதி,
ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம். (9958)

## விசேட கலந்துரையாடல்

சங்கானைக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர், ஊழியர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை வியாழக்கிழமை பகல் 1.00 மணிக்கு சித்தன்கேணி சிறிகணேச வித்தியாலயத்தில் நடைபெறும்.

கோப்பாய் கோட்டப் பாடசாலை அதிபர், ஆசிரியர், ஊழியர்களுக்கும் அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை ஊழியர்களுக்கும் உரும்பிராய் மத்திய மருந்தக ஊழியர்களுக்குமான விசேட கலந்துரையாடல் புத்தூர் சோமஸ்கந்த வித்தியாலயத்தில் நாளை பகல் 1.00 மணிக்கு நடைபெறும்.

கோப்பாய் கோட்டப் பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர், ஊழியர்களுக்கான விசேட கலந்துரையாடல் பகல் 1 00 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியிலும் நடைபெறும்;

வலிகிழக்கு பிரதேச சபை, கோப்பாய் அரசினர் வைத்தியசாலை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, மத்திய மருந்தக ஊழியர்களுக்கான விசேட கலந்துரையாடல் கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரியில் 2. 00 மணிக்கு நடைபெறும்.

வலி மேற்கு பிரதேச சபை, அரசினர் வைத்தியசாலை, சங்கானை கிராமிய வைத்தியசாலை, வட்டுக்கோட்டை ஆகியவற்றின் ஊழியர்களுக்கான கலந்துரையாடல் சித்தன்கேணி சிறிகணேச வித்தியாலயத்தில் பகல் 2 00 மணிக்கு நடைபெறும்

அனைவரும் தவறாது கலந்துகொள்ளும்படி தமிழீழ நிர்வாக சேவையினர் கேட்டுக்கொள்கின்றனர்

## கலந்துரையாடல்

யாவட்டக் கூட்டுறவுச் சபையின் அங்கத்துவ சங்கங்கள் மாவீரர் தின நிகழ்ச்சிகளை கொண்டாடுவதற்கான கலந்துரையாடல் நாளை வியாழக்கிழமை பி ப 2 00 மணிக்கும், அதனைத் தொடர்ந்து ப.நோ.கூ. சங்க தலைவர் பொது முகாமையாளர்களுக்குமான கலந்துரையாடல் சபைத் தலைவர் திரு. வை செந்திநாதன் அவர்கள் தலைமையில் சபை மண்டபத்தில் நடைபெறும். அனைத்து அங்கத்துவ சங்கங்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## நினைவு கூருகின்றோம்.

## 2.11.1994

1984-ம் ஆண்டு இதே தினத்தில் மணலாறு - நெடுங்கேணி பகுதியில் வேவுபார்க்கச்சென்ற போது சிறிலங்கா இராணுவம் சுட்டதில் வீரச்சாவெய்திய,

**சிலன்** (செல்லையா பாலகுமாரன் - வெள்ளாம்போக்கட்டி, அல்லாரை - கொடிகாமம்)

1987 -ம் ஆண்டு யாழ்- கொக்குவில் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**லெப் மோகன்ராம்** (நாராயணசாமி ஜெயராம்- -காட்டுப்புலம் ?- தொண்டமானாறு)

யாழ். தெல்லிப்பழைப் பகுதியில் இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**சிலன்** (நவரத்தினம் விஜயகுமார் - சோலையடிவளவு தெல்லிப்பழை கிழக்கு - யாழ்)

**அலெக்ஸ்** (சிவபாதம் சிவதாஸன் - விளாங்கொடை, அளவெட்டி, யாழ்)

1988 -ம் ஆண்டு கிளி- கனகராயன்குளம் பகுதியில் இந்தியப்படையினரின் காவலரண் மீதான அதிரடித்தாக்குதலில் வீரச்சாவெய்திய,

**2 ம்லெப். பிலிப்ஸ்** (இரத்தினம் கண்ணன் - கிருஷ்ணபுரம் - கிளிநொச்சி)

**மேஜர் காசி** (சுப்பிரமணியம் சிவதாசன் - 'நாகவேலகம்'' சுன்னாகம் யாழ்)

காரைநகர் - கோவளம் பகுதியில் இந்தியப்படையினருடனான சமரில் விழுப்புண்ணடைந்து சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**லெப். நந்தன்** (கணபதிப்பிள்ளை லோகேஸ்வரன் - ஆலடி - காரைநகர்)

ஊர்காவற்றுறைப் பகுதியில் இந்தியப்படையினர் மற்றும் தேசவிரோதிகளால் கைதாகி சுட்டுக் கொல்லப்பட்ட,

**காகம் -காசிம்** (நல்லதம்பி சந்திரசேகரம்- 6ம் ஒழுங்கை, கொட்டடி - யாழ்)

மட்டுநகரில் இந்தியப்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான

**வெள்ளையன்**

1992 -ம் ஆண்டு ஆனையிறவில் 22. 10 92 அன்று சிறிலங்கா இராணுவக் காவலரண் தகர்ப்பில் விழுப்புண்ணடைந்து யாழ் - மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் போது வீரச்சாவெய்திய,

**லெப். உருத்திரன்** (பரமானந்தன் அனுராஜ் -சம்பர்மலை, அதியடி- வல்வெட்டித்துறை)

ஆனையிறவு, கறுக்காய்ப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**லெப். இளஞ்செழியன்** (ஏகாம்பரம் திருமேனி - கொக்கட்டிச்சோலை - மட்டு)

**2-ம்லெப். இமையவன்** (முத்துக்குமார் யோகேஸ்வரன் -பத்திரகாளி கோயில் வீதி -பருத்தித்துறை)

இந்நாளில் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் இந்தியப் படையினராலும், சிறிலங்காப்படையினராலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**
(சி-10613)


# C. S. லிங்கநாதன் அன் கோ

ஸ்தாபனத்தாரின் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

விண்ணை நிறைக்குது வர்ணயாலம் | ஒளி பிறந்த திருநாளின் | அன்பர்கள் வாடிக்கையாளர்கள்
கண்ணைப் பறிக்குது அழகுவர்ணம் | வழி பிறந்து சிறந்தோங்க | அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள்

பண்டிகைகால பிடவை வகைகளுக்கு நாடவேண்டிய இடம்

# ச. லிங்கநாதன் வண்ணச்சோலை


மேஜர் சோதியா தெரு
13, 14, பெரியகடை
யாழ்ப்பாணம்

(9941)



புகைப்படப் பிரியர்களுக்கும், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்

# "நிமலன்"



தனது முதலாவது தீபாவளி வாழ்த்தை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றான்சிறந்த "கலர்" கறுப்புவெள்ளை புகைப்படங்களுக்கு

# நிமலன் புகைப்பட நிலையம்



மற்றும்

புகைப்படச் சுருள்கள், பற்றறிகள், அல்பங்கள், புகைப்பட மருந்துவகைகளையும் குறைந்த விலையில் பெற்றிட இன்றே நாடுங்கள்

நிமலன் விற்பனை நிலையம்,
155, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

(சி-10637)



# பவ வருட தீபாவளி சிறப்பு மலர்
# 02-11-1994



## நரகாசுரர் நவீனர்களல்லர்; தீபாவளிக் கதைகூறும் வரலாற்றுப்பாடம்!

இந்து மதத்தைச் சார்ந்த தமிழ்மக்களின் திருநாள்களில் ஒன்று தீபாவளி.

வாழையடி வாழைபோன்று தொன்று தொட்டு இந்து சமய மக்கள் உலகில் எப்பாகத்தில் இருப்பினும், தீபாவளித் திருநாளை வெகு சிறப்பாக கொண்டாடி வருகின்றனர்.

தீபாவளிப் பண்டிகையைக் கொண்டாடுவதன் முக்கிய நோக்கம் அடிமைத் தளை நீங்கி மக்கள் சுதந்திரக் காற்றை சுவாசிக்க முடிந்த வரலாற்றை உள்ளடக்கியதாக தீபாவளி பற்றிய சரித்திரம் அமைந்தது தான்.

எனவேதான் சுதந்திர தாகங் கொண்ட மக்களால் இத்தீபாவளி பண்டிகை வெகுசிறப்பாகவும் விமரிசையாகவும் கொண்டாடப்பட்டு வருகிறது.

### தீபாவளிக் கதை

தீபாவளி பண்டிகைக்கு ஆதாரமாக நரகாசுரனின் கதை வழங்கப்படுகிறது-

அவனது ஆட்சிக் காலத்தில் பெரும் அக்கிரமகாரியங்களையும் அட்டூழியங்களையும் செய்து வந்தான். அவனது மறுபெயர் பௌமன் தேவர்களிடம் கொண்ட பகையாலும், வெற்றிச் செருக்காலும் தேவலோக வாசிகளையும், அவர்களை பூஜிக்கும் பூவுலக மன்னர்களையும், முனிவர்களையும் அடிக்கடி துன்புறுத்தி வந்தான்.

அவை தவிர ஆறாயிரம் அரச குமாரிகளைக் கவர்ந்து வந்து சிறையிலிட்டு வருத்தி வந்தான்

இவ்வாறு அவனது கொடுங்கோன்மை ஆட்சிக்கு அளவு கணக்கு இல்லாமல் போகவே அறத்தை நிலை நாட்ட கிருஷ்ணபரமாத்மா ஐஸ்வரியங்களில் வீர ஐஸ்வரியத்தைப் பெற்று வீரலட்சுமியாய் உருப்பூண்டு சத்தியபாமையுடன் புறப்பட்டு அவனுடன் போருக்கு சென்றார்.

இருவருக்கும் இடையில் பெரும் பயங்கரப் போர் நடைபெற்றது. ஈற்றில் கண்ணபிரானின் சக்கராயுதத்தால் சிரம் துண்டித்து நரகாசுரன் மடிந்தான்.

அவன் உயிர் பிரியும் வேளை மனந்திருந்தி தான் மடிந்த நாளில் மக்கள் அனைவரும் சுதந்திரமாக புத்தாடை அணிந்து அறுசுவை உண்டிகள் புசித்து பெருநாளாக அத்தினத்தை கொண்டாட வேண்டும்என்று கேட்டுக் கொண்டான்.

அவன் வேண்டிக் கொண்டதின் பொருட்டு திருமாலும் அவ்விதமே அருளினார். இக்கதை தீபாவளியை நாம் கொண்டாட ஏதுவாக தொன்று தொட்டு வழங்கப் பட்டு வருகிறது.

### தீபாவளி திடசங்கற்பம்

நமது தமிழீழத்தில் நரகாசுரன் ஆட்சி காலம் போன்றேகடந்தநான்காண்டுகளையும் தமிழ் மக்கள் கண்டுகழித்து வருகின்றனர். தென் தமிழீழமோ நரகாசுரன் சித்திரவதைக் கூடமாகவே இன்றுள்ளது.

தென்பகுதி சிங்கள பேரினவாதிகள் அனைவரும் துட்டகைமுனுக்களாக தமிழ் மக்கள்மீது துவேச ஆக்கிரமிப்பை வெகு சுதந்திரமாகவோ செலுத்தி வரக் காரணமாக இன்றைய லங்கா அரசு அனுமதித்துள்ளது கண்கூடு-

இந்நிலையில், எமது மண்ணிலும் சுதந்திரம் அடைந்து மக்கள் சபீட்சம் பெறும் காலம் விரைவில் வந்தடைய இத்தீபாவளித் திருநாளில் திடசங்கற்பம் கொள்வோமாக:

தொகுப்பு :
**கவிகரன்**

---


★ 22 கரட் தங்கத்தில் நகைகளை ஆடர் செய்து பெறவும்,
★ நவீனரக வெள்ளிப் பாதசரங்களை பல விதங்களில் தெரிவு செய்யவும்

**கயல்விழி நகைப் பூங்கா**
224 B. சந்தோஷம் (கஸ்தூரியார்) வீதி,
யாழ்ப்பாணம்.

---

தீபாவளித் திருநாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடிக் கொண்டிருக்கும் அனைவருக்கும்
எமது வாழ்த்துக்கள்

**லலிதா அணிகலப் பூங்கா**
213, சந்தோஷம் (கஸ்தூரியார்) வீதி,
யாழ்ப்பாணம்.

---

உள்நாட்டு, வெளிநாட்டு துணிமணிகளுக்கு
யாழ்நகரில் தன்னிகரற்ற ஸ்தாபனம்

**புதிய மகிழ்ச்சி ஆடையகம்**
**(நியூ ஹப்பி ரெக்ஸ்ற்)**
146, சிறப்பு அங்காடி - யாழ்நகர்.

---

கட்டடப் பொருள்கள் மற்றும்
பெயின்ற் வகைகளுக்கு
நம்பிக்கையான இடம்

**முருகன் வணிக நிலையம்**
21, இளங்கோ (மணிக்கூட்டு) வீதி,
யாழ்ப்பாணம்.

---

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
தீபாவளி வாழ்த்துக்கள்
உங்கள் இல்லங்களில் நடைபெறும் சகல நிகழ்வுகளையும் படமாக்க எம்மை தெரிவு செய்யுங்கள்.

அருணோதயம்
**புகைப்பட கலையகம்**
218, பலாலிவீதி, கந்தர்மடம் சந்தி,
யாழ்ப்பாணம்.

---

சகலவிதமான வர்ண, கறுப்பு - வெள்ளை
புகைப் படங்களுக்கு இன்றும் - என்றும்!

**குணம் போட்டோ**
(உபதபால் நிலையம் முன்பாக)
சண்டிலிப்பாய்வீதி, மானிப்பாய்.

---

தீபாவளித் திருநாளில்
தீமைகள் விலக வாழ்த்துகிறோம்!
சகலவிதமான பதிப்பக வேலைகளுக்கும்

**சாந்தி அச்சகம்**
575, கே. கே. எஸ். வீதி,
நாச்சிமார்கோவிலடி, யாழ்ப்பாணம்.

---

தொழிலாளர்கள், விற்பனையாளர்கள், அன்பர்கள் அனைவருக்கும் தித்திக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்!

**ஆர். வி. ஜி.**
**பீடி ஸ்தாபனம்**
58, குறுக்கு வீதி, - நல்லூர்:

---

**வ. இ. வ. மருந்தகம்**
504, மருத்துவமனை வீதி
யாழ்ப்பாணம்

---

இந்துசமய நண்பர்கள், அன்பர்கள் ஆதரவாளர்களுக்கு
தீபாவளி வாழ்த்துக்கள் உரித்தாகுக
வைத்திய நிபுணர்கள் சிபார்சு செய்யும் கண்ணாடிகளைச்
சரியாக வழங்குபவர்

**எஸ். எம். பெர்னான்டோ**
(இலங்கை வங்கி அருகில்)
580, மருத்துவமனை வீதி,
யாழ்ப்பாணம்

---

தீபாவளி வாழ்த்துக்கள்!
அந்தியகால சேவையில் முதன்மை வாய்ந்த ஸ்தாபனம்

**"ஒளி இல்லம்"**
(புனித யாகப்பர் ஆலய பக்கம்)
210, பிரதான வீதி
யாழ்ப்பாணம். (சி/10603)

---

ஜவுளி உலகின் நவீன முன்னோடிகள்
திருமணம் மற்றும் முகூர்த்தப்
பட்டுப் புடவைகளுக்கு

**இளவரசி சேலைச் சோலை**
57, சிறப்பு அங்காடி, (உட்புறம்)
யாழ்ப்பாணம்.

---

அழகுப் பொருள்களின்
கூடலாகத் திகழும் ஒரே இடம்

**ஜெயா அழகு மாடம்**
உதிரி மொத்த விற்பனையாளர்
177 A, 187, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

---

வாடிக்கையாளர்களுக்கு
எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்!
22 கரட் தங்க நகைகளின் கூடம்

**நதியா நகை மாடம்**
2, சந்தோசம் (கஸ்தூரியார்) வீதி.
ஸ்ரான்லி வீதிச்சந்தி, யாழ்ப்பாணம்.

---

தீபாவளி வாழ்த்து!
- மளிகைப் பொருள்கள்
- புடவை
- அலுமினிய பொருள்கள்

எதுவாயினும் ஒரே இடத்தில்

**வே. சி.கம. ளஞ்சியம்**
ஆலடிச்சந்தி, மானிப்பாய்.

---

வாடிக்கையாளர்கள், அன்பர்கள அனைவருக்கும்
தீபாவளி வாழ்த்துக்கள் உரித்தாகுக!
நவீன அழகிய தங்க ஆபரணங்களுக்கு சிறந்த ஸ்தாபனம்

**கணேசா நகையகம்**
194, சந்தோஷம் (கஸ்தூரியார்) வீதி,
யாழ்ப்பாணம்.

---

- பான்சி பொருள்கள் மற்றும்,
- நவீன விளையாட்டு பொருள்களுக்கு

ஒரே இடம்!

**ராஜு ஸ்ரோர்ஸ்**
67, 69, சந்தோஷம் (கஸ்தூரியார்) வீதி
யாழ்ப்பாணம்.

---

தீபாவளி நல்வாழ்த்து !
- தரமான சுவையான ஐஸ்கிறீம் வகைகள்,
- குளிர்பானம், கேக், வகைகள், சிற்றுண்டிகள்

தயாரித்து வழங்குபவர்,

**ராஜா குளிர் சுவையகம்**
36, சந்தோஷம் (கஸ்தூரியார்) வீதி,
யாழ்ப்பாணம்.

---

வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்கள்
அனைவருக்கும் எமது
தீபாவளி நல்வாழ்த்துக்கள்.

**நம்பிக்கையின் சின்னம்**
அண்ணா உற்பத்திகளை வாங்கி,
இனாம் பொருள்களைப் பெறுங்கள்.
அண்ணா தொழிலகம்
இணுவில்.

ANNA

---

1960 - ஆண்டு தொடக்கம் றேடியோ, அம்பிளிவயர் பிற்பாடு ரீ, வி., டெக் திருத்துனராக விளங்கும் நாம் இனிவரும் ஆண்டுகளிலும் சேவையை தொடர்வோமென இத் தீபாவளித் திருநாளில் தெரிவித்துக் கொள்கிறோம்!
இத் தொழிலில் பழையவர் நாங்களே!

**வானொலி மனுவல்**
(றேடியோ மனுவல்)
111, அர்ச்சுனா (ஸ்ரான்லி) வீதி,
யாழ்ப்பாணம்.

---

வாடிக்கையாளர்கள், தொழிலாளர்கள், அன்பர்கள், ஆதரவாளர்களுக்கு தித்திக்கும் தீபாவளி வாழ்த்துக்கள்!
தித்திக்கும் தின்பண்டங்கள், குளிர்களி, தேனீர், சிற்றுண்டி வகைகளை சுவைத்து மகிழ

**லிங்கம் குளிர் தடாகம்**
52, வெலிங்டன் சந்தி,
லெப். இளங்கோ தெரு,
யாழ்ப்பாணம்.

---

விநியோகஸ்தர், விற்பனையாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு தீபாவளி வாழ்த்துக்கள்!
சகல வித றெடிமேட் பட்டுப் புடவைகளுக்கு
நம்பகமான இடம்

**சிற்றி காமன்ஸ்**
பலாலி வீதி: திருநெல்வேலி.
தொழிலகம்: ''சிவபதி'' இணுவில்.

---

வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்களுக்கு எமது
தீபாவளி நல்வாழ்த்துகள்!
ஒரே கூரையின் கீழ் அழகுசாதனப் பொருள்கள்,
புடவை வகைகளைத் தெரிவு செய்ய நாடுங்கள்,

**விக்னேஸ் ஆடையகம்**
45, சந்தோசம் (கஸ்தூரியார்) வீதி,
யாழ்ப்பாணம்.

---

நவநாகரிக பட்டு, பருத்தி புடவைகளுக்கும்,
கோவில்களுக்குரிய குடை, கொடி, ஆலவட்டம்,
வாகுமால் என்பவற்றுக்கும்
சிறந்த ஸ்தாபனம்,

**ச. சி. ஞானம் ஆடையகம்**
**S. S. Gnanam Textiles**
54, பெரியகடை, - யாழ்ப்பாணம்.

---

அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்
தீபாவளி நல்வாழ்த்துகள் உரித்தாகுக!
நாகரிகத்திற்கு ஏற்ப காலணிகளைத் தெரிவு செய்ய
நாடவேண்டிய இடம்,

**கபிலா காலணியகம்**
4, சந்தோசம் (கஸ்தூரியார்) வீதி,
யாழ்ப்பாணம்.

---

எத்திக்கும் கொண்டாடும் தித்திக்கும்
தீபாவளி நாளில் தித்திப்பூட்டும் பொருள்களின்
விற்பனை முகவரான நாமும் இணைந்து
வாழ்த்துகிறோம்!
கேக், குளிர்பான தயாரிப்புகளை வாங்க
எம்மை நாடுங்கள்!

**கணேஷா**
**வர்த்தக நிலையம்**
65, சந்தோசம் (கஸ்தூரியார்) வீதி,
யாழ்ப்பாணம்.

திக்கெட்டும் தமிழ் மணம் கமழ! மக்கள் மனம் மகிழ!!
தித்திப்பான தீபாவளி நல்வாழ்த்துக்கள்!!!

**தீபாவளி திருநாளை முன்னிட்டு நாம் கூறும்**
**நற்செய்தி**

வியாபாரிகளே:

உங்கள் வியாபாரத்திற்கேற்றதரமான பொருட்களை
மொத்தமாகக் கொள்வனவு செய்துகொள்ள

# V
# சேரன்
# பல்பொருள் வாணிபம்

| | |
|---|---|
| அர்ச்சுனா சாலை,<br>யாழ்ப்பாணம். | பருத்தித்துறை வீதி,<br>நெல்லியடி. |
| கண்டி வீதி,<br>சாவகச்சேரி. | கண்டி வீதி,<br>கொடிகாமம். |
| பிரதான வீதி,<br>பருத்தித்துறை. | காங்கேசன்துறை வீதி,<br>சுன்னாகம். |

அழகு சாதனத் தேவைகளுக்கு
ஒப்பற்ற ஓர் இடம்

**எழிற் கூடம்**
அர்ச்சுனா சாலை
யாழ்ப்பாணம்

ஆடை வகைகளுக்கோர் உன்னத இடம்
மனம் கவரும் வண்ண நிறங்களில்
சின்னஞ்சிறுவர் தொடக்கம்
பெண்ணம் பெரியோர் வரை
தெரிவுக்கேற்ற புடவை வகைகள்

**எழினி புடவை வாணிபம்**
லெப். கேணல் இராசன் தெரு
யாழ்ப்பாணம்

உயிர் காக்கும் மருந்துகளுக்கு ஓர் இடம்

சகல மருந்து, பால்மா வகைகளை
மொத்தமாகவும் சில்லறையாகவும் கொள்வனவு செய்து
உங்கள் வியாபாரத்தைப் பெருக்குங்கள்

**சேரன் மருந்து வாணிபம்**
அர்ச்சுனா சாலை
யாழ்ப்பாணம்

சில்லறைப் பொருள்களுக்கோர் சிறப்பான இடம்!
உங்கள் அன்றாட தேவைகளுக்கான
சில்லறைப் பொருட்களை
மலிவாகப் பெற்றுக் கொள்ள

**யாழ்ப்பாணன்**
**விற்பனை நிலையம்**
அர்ச்சுனா சாலை
யாழ்ப்பாணம்

விவசாயிகளே!

உங்கள் உற்பத்திப் பொருட்கள்
நற்பலனைத்தந்திட

உங்களுக்குத் தேவையான
விவசாய இரசாயனப் பொருள்களை
மலிவாகப் பெற்றுக் கொள்ள

**சேரன் வேளாண் இடுபொருள்**
**வாணிபம்**
காங்கேசன்துறை வீதி,
சுன்னாகம்

மாணவர்களே, அச்சக உடைமையாளர்களே!
உங்கள் பாவனைக்குத் தேவையான
அச்சுத்தாள் வகைகளையும்
பாடசாலை கொப்பி வகைகளையும்
மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றிட

**சேரன்**
**காகிதாதிகள் வாணிபம்**
சிறப்பங்காடி
யாழ்ப்பாணம்

இயந்திரப் பாவனையாளர்களே!

உங்கள் இயந்திரங்களுக்கு
மிகவும் பொருத்தமான உதிரிப்பாகங்களை
எம்மிடம் கேளுங்கள்...

**விக்ரர்**
**இயந்திர உதிரிப்பொருள்**
**வாணிபம்**
அர்ச்சுனா சாலை
யாழ்ப்பர்ணம்

[சி-10609]

# CIMA

STAGE 1
(NEW SYLLABUS)
MAY - 1995

# IAB

FOUNDATION
INTERMEDIATE
JUNE - 1995
COMMENCEMENT - 05-11-1994
For details

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**

16, 3RD CROSS STREET
JAFFNA

[சி-10614]


# கழுதகளின் ஆக்கிரமிப்பில் ஐக்கிய தேசியக்கட்சி

-ஏ. ஜே. ரணசிங்க தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி கழுகுகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது என ஏ. ஜே. ரணசிங்க தெரிவித்துள்ளார்.

நடைபெறவுள்ள ஜனாதிபதித்தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிடும் இவர் ஜனாதிபதிதேர்தலுக்கு அனுபவமுள்ள தலைவர் ஒருவர் நியமிக்கப்படல் வேண்டும் என முன்னர் கோரிக்கைவிடுத்திருந்தவர்கள், தற்போது 17 வருட அனுபவ முன்வரணில் விக்கிரமசிங்காவைநிராகரித்து விட்டார்கள் என்றார். சிறிமா திசாநாயக்காவின் அரசியல் வரலாறு ஜனநாயக ஐக்கிய முன்னணிக்குரியதே அன்றி ஐ.தே.கவுக்குரியதல்ல என்றார்.

தான் முன்னர் கூறியவை மெய்ப்பிக்கப் பட்டுள்ளதாக கூறிய ரணசிங்க ஐ.தே.கவை முன்னர் அழிக்கத்திட்டமிட்டிருந்தவர்கள் தற்போது அதனைப்பொறுப் பேற்றுக் கொண்டுள்ளனர் எனத்தெரிவித்தார்.

## லலித்துக்கும் காமினிக்கும் ஒரேபொலிஸ்குழுவிசாரணை

[கொழும்பு]

லலித்தின் கொலை தொடர்பான விசாரணையை மேற்கொண்ட பொலிஸ்குழுவே காமினியின் கொலை தொடர்பாகவும் விசாரணையையும் மேற் கொள்வதற்கு நியமிக்கப்பட்டுள்ளது இவ்வாறு கொழும்பில் சிறிலங்கா பொலிசாரின் தலைமைச்செயலகம் தெரிவித்துள்ளது-

## மனத்தாங்கல்

பொ. ஐ. மு வில் உள்ள சிறிய அரசியல் கட்சிகளிற்கும் ஆளும் கட்சியான பொ- ஐ- முன்னணிக்கும் மனத்தாங்கல் ஏற்பட்டுள்ளது-

லிபரல் கட்சியில் உள்ள ஒருவரிற்கு பாராளுமன்றத்தில் உறுப்பினர் பதவி கொடுக்கப்பட்டதற்கும் அஷ்ரப்பிற்கு முக்கிய அமைச்சர் பதவி வழங்கப்பட்டது தொடர்பாகவே ஏனைய சிறிய கட்சிகளிற்கும் அரசின் மீது வெறுப்பு ஏற்பட்டுமனத்தாங்கல் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது-

## பரீட்சைகள்

யாழ் மாவட்டத்தில் எழுதுவினைஞர் II 'ஏ' பதவி உயர்வுப் பரீட்சை எதிர்வரும் 19ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

இதேவேளைநிர்வாகசேவை வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை இம்மாதம் 19ஆம் திகதிக்குப் பின்போடப்பட்டுள்ளதாகவும் யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் ப. திலகநாயகம் அறிவித்துள்ளார்.

# ரூபவாஹினி ஒதுக்கிய நேரம் பிரசாரத்திற்கு ஏற்றதல்ல

- விக்கிரம வீரசூரிய குறை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி தமது ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தை ரூபவாஹினியில் மேற் கொள்வதற்கென வழங்கப் பட்டுள்ள நேர அட்டவணை பொருத்தமற்றது என அக்கட்சியின் அமைப்பாளர் விக்கிரம வீர சூரிய சுட்டிக் காட்டியுள்ளார்.

மாலை 6.15 மணி முதல் 6 30 வரையும் இரவு 10.15 முதல் 10.30 வரையும் கொடுக்கப்பட்டுள்ள நேரத்தினால் பயன் ஏதும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மாலை நேரம் குழந்தைகள் தொலைக் காட்சி பார்க்கும் நேரமாகவும் இரவு நேரம் மக்கள் உறங்கிவிடும் நேரமாகவும் உள்ளது எனவும் அவர் ரூபவாஹினி நிர்வாகத்தினர் மீது குற்றம் சாட்டியுள்ளார்.

இதேவேளை ஐக்கிய தேசிய கட்சியினர் பொது மேடைகளில் தேர்தல் பிரசாரம் செய்வதை நிறுத்தியுள்ளதுடன் வானொலி, தொலைக்காட்சிகளிலும் மற்றும்வீடுவீடாக சென்று ஒட்டுக் கேட்பதிலுமே ஈடுபட போவதாக அறிவித்திருந்தது தெரிந்ததே.

## மயிரிழையில் தப்பிய சபாநாயகர் முகமட்

(கொழும்பு)

காமினி கொல்லப்படக் காரணமான குண்டுவெடிப்பு சம்பவத்தில் முன்னாள் சபாநாயகர் எம்-எச்- முகமட் அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினார் எனத் தெரிவிக்கப்படுகிறது-

அன்றைய கிராண்ட் பாஸ் கூட்டத்திற்கு அநுரா உட்பட ஐ-தே-கவின் உயர்மட்ட பிரமுகர்கள் அனைவரும் வந்திருந்தனர் அனைவரும் தம் உரைகள் முடிவடைந்ததும் அங்கிருந்து புறப்பட்டுசென்று விட்டனர்- இந் நிலையில் எம்-எச்- முகமட்டும் தம் பேச்சை முடித்துக் கொண்டு புறப்படும்போது கடைசிப் பேச்சாளரான காமினி பேசுவதற்கு கிராண்ட் பாஸ்வரும் வரை மேடையில் இருக்கும்படி அவர் வீரசிங்க மல்லிமாராச்சியால் கேட்கப்பட்டார்

இதையடுத்து அவரும்அதை ஏற்று மேடையில் அமர்ந்திருந்தார்- இந் நிலையில் நள்ளிரவில் கட்சியின் பொதுச் செயலர் டாக்டர் காமினி விஜேயசேகர கூட்ட மேடைக்கு வந்து சேர்ந்தார்- மேடையில் அவர் அமர ஆசனம் இல்லாமையினால் அதை கண்ணுற்ற முகமட், தான் அமர்ந்த ஆசனத்தில் விஜேசேகராவை அமருமாறு கேட்டுக் கொண்டு விடைபெற்று அங்கிருந்து அகன்றார்.

குண்டு வெடிப்பில் காமினி விஜேசேகர பின்னர் கொல்லப்பட்டது தெரிந்ததே-


எம் இதயம் கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்

**சாமுவேல் சன்ஸ் அன் கொம்பனி லிமிட்டட்**

206, 208, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
[General Hardware Merchants]

சகல விதமான தராசுகளும், படிகளும், பெயின்ற் வகைகள், கட்டிடப்பொருட்கள், ஹாட்வேயர்பொருட்கள் ரோனியோ இயந்திரம் விற்பனைக்குண்டு

சகல விதமான தராசுகள் பழுது பார்த்து சீர்செய்து முத்திரையிட்டுக் கொடுக்கப்படும்
(Repairing, Servicing and Stamping)

(சி-10619)



அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்களுக்கு எம் மனங்குளிர்ந்த

தீபாவளி நல்வாழ்த்துக்கள்

**ஸ்ரீ தாமோதர விலாஸ்**

403, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-10628)



அன்பர்கள், நண்பர்கள் ஆதரவாளர்களுக்கு
எம் உளம் கனிந்த
தீபாவளி நல்வாழ்த்துக்கள்

**கோபிராஜ் ஆடை அகம்**

(ராகமாலிகா)

4,சிறப்பு அங்காடி (உட்புறம்)
யாழ்ப்பாணம்

(சி-10621)


## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ் மாவட்டம்

### ஆண்டிறுதி பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் கோட்டரீதியாக நடைபெற்று புதிய நிர்வாகசபை தெரிவு இடம்பெறவுள்ளது.

**தென்மராட்சிக் கோட்டம்**

4-11-94 [வெள்ளி] பி. ப. 3-30 மணி சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி -

**வடமராட்சிக் கோட்டம்**

7-11-94 [திங்கள்] பி. ப. 3 மணி சதாபொண்ட்ஸ் கல்வி நிலையம் - மாலுசந்தி

**மருதனார்மடம் கோட்டம்**

9-11-94 [புதன்] பி. ப. 3 மணி இணுவில் மத்திய கல்லூரி

**யாழ் கோட்டம்**

11-11-94 வெள்ளி, பி. ப. 3 மணி புதிய விஞ்ஞான கல்வி நிலையம் - யாழ்

**பண்டத்தரிப்பு கோட்டம்**

14-11-94 திங்கள் பி. ப. 3 மணி சுப்றா கல்வி நிலையம் - சித்தன்கேணி

★ அனைத்து உறுப்பினர்களினதும் வரவு கண்டிப்பாக கவனிக்கப்படும்.

★ கூட்டம் நடைபெறும் நாட்களில் அக்கோட்ட நிறுவனங்கள் அனைத்தும் மாலையில் மூடப்பட்டிருக்கும்.

பொதுச்செயலாளர்
யாழ்மாவட்டம்

(சி-10610)

## பிரார்த்திக்கின்றோம்

கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் பிரதம குருக்களும் நித்தியநைமித்திய பூசகருமான கட்டுவன் மயிலிட்டி தெற்கைச் சேர்ந்த சிவ ஸ்ரீ க. சிவபாதசுந்தரக் குருக்கள் ஐயா அவர்கள் 21-10-94 அன்று சிவபதமடைந்துள்ளார். ஐயா அவர்களின் ஆத்ம சாந்தி வேண்டி அம்பாளை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி

இங்ஙனம்
கோண்டாவில்
தில்லையம் பதி
வாழ்மக்கள்
[9946]

## கல்வி அங்கத்தவர் உறவுப் பயிற்சி உத்தியோகத்தருக்கான

### விண்ணப்பம் கோரல்

**தரம் 1**

**கல்வித் தகைமை:** க. பொ. த. உயர்தரம் வர்த்தகப் பிரிவு நான்கு பாடங்களில் சித்தியும் இதில் கணக்கியலில் திறமைச் சித்தியும் (பொருளாதாரம் உட்பட)

**மேலதிக தகைமைகள்:** 1. கூட்டுறவுக் கல்வி உயர்தரம்
2. விசேட கல்விப் பயிற்சி நெறிக்கான சான்றிதழ்
3 எமது துறையோடு இணைந்த அனுபவம் ஆகியவற்றிற்கு முன்னுரிமை அளிக்கப்படும்

**வயது:** 20 - 40 வரை

**சம்பளத்திட்டம்:** கூ: ஆ. உ. ஆணையாளர் (ப/தெ) அவர்களின் 9/94 சுற்றுநிருபத்திற்கமைய 9-வது சம்பளத்திட்டம்.
1165 – 60×3 – 75×11 – 2170/-

மேலதிக தகைமை கொண்டுதெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் இச்சம்பள அடிப்படையில் பொருத்தமான நிலையில் அமர்த்தப்படுவர்.

விண்ணப்பங்கள் 15-11-94-க்கு பிந்தாமல் பொது முகாமையாளர், வடமாகாண ப. தெ. வ. ஆ. கூ. ச. சமாசம், இல. 499, காங்கேசன் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

இல. 499,
காங்கேசன் வீதி,
யாழ்ப்பாணம்

பொதுமுகாமையாளர்
வடமாகாண
ப. தெ. வ. ஆ. கூ. ச. சமாசம்

(இ/10629)

## நோயாளர் நலன்புரிச் சங்கம் அளிக்கும் தீபாவளிக் கதம்பம்

### நிதியுதவி நிகழ்ச்சி

இடம்:-கைலாசபதி கலையரங்கம்
யாழ். பல்கலைக்கழகம்
காலம்:- 02-11-1994 (இன்று) புதன்கிழமை
நேரம்:-மாலை 5.00 மணி
ஆதரவளித்தவர்கள் அன்புடன்
அழைக்கப்படுகின்றார்கள்
நன்றி
(9939)


தீபாவளி திருநாளில் எல்லோர்க்கும்
எம் மனதார்ந்த நல்வாழ்த்துக்கள்

எமது வாடிக்கையாளர்களில்

**இம்மாத அதிர்ஷ்டசாலிகள்**

1-ம் பரிசு
செல்வி எஸ், உமாதேவி
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய் — ரூ 2500/ சி. இல 7957

2-ம் பரிசு
சாயி வீடியோ
அச்சுவேலி. — ரூ: 1500/ சி இல, 7937

3-ம் பரிசு
திரு. சி. மகேஸ்வரன்
406/1, காங்கேசன்துறை சாலை,
யாழ்ப்பாணம். — ரூ. 1000/- சி. இல. 7959

அதிர்ஷ்டம் அழைக்கின்றது!
எம்மிடம் கொள்வனவு செய்யுங்கள்

★ **எழிலகம்** ★

லெப். இளங்கோ தெரு
யாழ்ப்பாணம்

(சி-10628)



தீபாவளி வாழ்த்துக்கள்! தீபாவளி வாழ்த்துக்கள்!!

அன்பர்கள் ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எம் உளம் கனிந்த

★ தீபாவளி நல் வாழ்த்துக்கள் ★

மங்கள வைபவங்களுக்கேற்ற
கூறைச்சேலைகள், காஞ்சிபுரம் வகைகளுக்கும்
ஆடவர் தேவைகளுக்கான சகல வகை
லோங்ஸ், சேட், சேட்டிங், சூட்டிங் வகைகளுக்கும்

★ ஒப்பற்ற ஓர் இடம் ★

**கிருஷிகா ஆடை அகம்**

69A, சிறப்பு அங்காடி யாழ்ப்பாணம்

(சி-10616)



தீபங்கள் ஒளிர்ந்திடும் இத்திருநாளில்

**புகைப்படத் துறைசார் அனைவருக்கும்**

எமது இனிய நல்வாழ்த்துக்கள்

கலக்சி புகைப்பட சேவை
337 1/1 கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

கலக்சி
இல 64, 1-ம் மாடி
பஸ் நிலையம்
T.P. 024/2467 வவுனியா

(சி 10631)

புகைப்படத் துறைப் பொருட்கள் விற்பனையும், வர்ணப் பிரதியாக்கலும்

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு
11-09-1932
உதிர்வு
12-11-1993

**திரு சிவலிங்கம் துரைராசா**
(சுங்க இலாகா அத்தியட்சகர் - கொழும்பு)

ஆண்டு ஒன்று சென்று விட்டாலும்
உங்கள் அன்பு எம்மை விட்டு அகலாது
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

''துரையகம்''
சங்கானை வடக்கு,
பண்டத்தரிப்பு

தாய், மனைவி பிள்ளைகள்,
சகோதரர்கள்
மைத்துனிமார்
(9838)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னையின் மடியில்
21. 9. 1915
ஆண்டவன் அடியில்
28. 10.1989
திதி
2.11.1994

**அமரர் ஏரம்பு செல்லத்துரை**
வாழ்வாங்கு வையத்துள் வாழ்ந்த
மனிதருள்மாணிக்கமே!

சென்ற இடமெல்லாம் சீரோடு வாழ்ந்த செம்மலே எங்களையெல்லாம் அன்போடும்பண்போடும் பராமரித்து பாசத்தின் இருப்பிடமாய் பண்பின் பிறப்பிடமாய் வாழ வைத்த அன்புத்தெய்வமே எம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு மீளாத்துயில் கொண்டு ஐந்து ஆண்டுகள் ஓடி மறைந்தும் எமது உள்ளங்களில் நீக்கமற நிறைந்திருக்கும்.

தகவல்
அன்பு மகன்
செ. சிவராசா
கைதடி நாவற்குழி
தெற்கு, கைதடி.
(9933)

தங்களின் ஆத்ம சாந்திக்கு எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்
இங்ஙனம்
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பிரியமுள்ள பேரப்
பிள்ளைகள் பூட்டப்பிள்ளைகள்.

## 45-ம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்
05.07.1974
மண்ணுக்காக
19.09.1994



கடற்கரும்புலி
**கப்டன் இசைவாணன் (லக்ஸ்மன்)**
குகதாசன் பிரணவன்
(முதலியார் ஒழுங்கை நல்லூர் தெற்கு அரியாலை)

அரியாலை மேற்கு மண்ணில் உதித்து
ஈழமண்ணின் விடுதலைக்காய்
கற்பிட்டிக் கடலில் கடலரசன் தகர்ப்பில்
தன்னை அர்ப்பணித்த குகதாசன் பிரணவன்
கடற்கரும்புலி கப்டன் இசைவாணன் (லக்ஸ்மன்)
நல்லூர் தெற்கு சனசமூக நிலையத்தின்
அங்கத்தவராய் இருந்து, விளையாட்டு வீரனாக
விளங்கி
எமது நிலையத்தின் புகழை உயர்த்தியமையை
இந்நாளில் நாம் நினைவு கொள்கின்றோம்.

அவருக்கும், அவருடன் இணைந்த லெப். கேணல் நளாயினி, மேஜர் மங்கை, கப்டன் வாமன் ஆகிய கடற்கரும் புலிகளுக்கும் எமது இதய அஞ்சலியைச் செலுத்துகிறோம்.

அன்னாரின் பிரிவில் துயருறும் குடும்பத்தினர்க்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிக்கின்றோம்.

**நல்லூர் தெற்கு**
**சனசமூக நிலையத்தினர்**
(9945)


## இறைச்சிக் கோழி

இறைச்சிக் கோழிகள் எந்நேரமும் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளவும், உங்கள் கோழிகளை சந்தைப் படுத்தவும், மேலும் புறொயிலர் கோழிகளை கொள்வனவு செய்யவும்,

சிறந்த இடம்

**சுவையருவி**
**கோழிப்பண்ணை**

லெப். கேணல் இராசன் தெரு,
யாழ்ப்பாணம்;
(பி-10600)


## -ம் ஆண்டு நினைவு நாள்



**2-ம் லெப். மணிமாறன்**
தம்பிராசா இரகுலதரன்
திதி 02-11-1994

கருகப்பனை
1971-12-09
பிறப்பு

பூநகரி
1993-11-12
வீரச்சாவு

மண்ணைக் காக்கச் சென்ற எங்கள் அன்பு மகனே எங்கள் வாழ்நாள் தோறும் நின் திருமுகமும் மழலை மொழியும் எங்களை விட்டகலா.

2-11-94 இன்று எமது இல்லத்தில் நடைபெறும் நினைவு நிகழ்வுகளிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகள் உற்றார், உறவினர், நண்பர்களை அழைக்கின்றோம்.

தவளை இராணுவ சமரில் இவருடன் வீரச்சாவைத் தழுவிய ஏனைய மாவீரர்களுக்கும் எமது இதய, கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்துகின்றோம்.

நின் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கும்
''கமலவாசம்'',
உரும்பிராய் மேற்கு
உரும்பிராய். (9937)

அம்மா, அப்பா
சகோதரர்கள், உறவினர்
நண்பர்

## 7-ம் ஆண்டு நினைவஞ்சலி



**வைத்திலிங்கம் சண்முகலிங்கம்**
(யாழ்/ போ: வை. சாலை அம்புலன்ஸ் சாரதி)

அன்னை மண்ணில்
1938- 12- 31

அன்னியன் அழிப்பில்
1987-10-21


ஐயனே உங்களை அன்னியன் அழித்து
ஆண்டுகள் ஏழாச்சு!
ஆறாத்துயரை நெஞ்சில் சுமந்தும்
அழியா நினைவுகளை மீட்கிறோம் இன்று!

-குடும்பத்தினர்


தற்போதைய முகவரி
நல்லலட்சுமி அவெனியு
கோயில் வீதி, நல்லூர்
(9936)

## நினைவு தினம்

7-ம் ஆண்டு



2-ம் ஆண்டு



**வி. முத்துக்குமாரு துரைராஜா**
(யாழ் போதனா வைத்தியசாலையில்
கடமையின் போது காலமானார்)
ஆண்டவன் படைப்பு:-
23.11.1961
அன்னியவன் அழிப்பு:-
21.10.1987

**2-ம் லெப். இமையவன்**
(வி. முத்துக்குமாரு யோகேஸ்வரன்)
[கறுக்காய் தீவில் வீரச்சாவு]
தமிழ்த்தாயின் மடியில்:-
2 02.1974
தமிழீழத் தாயின் மடியில்!-
02.11.1992

(திதி:- 2.11-1994 இன்று)

அன்பான மகனே
பண்பான சகோதரனே
பாசத்தால் பரிதவிக்கின்றோம்
பாவிகளைப் பார்க்காயோ
கடமையினைச் செய்தாய்
கண்ணுறக்கம் இன்றி
விண்ணுலகம் செல்வதற்கா.

கண்ணைக் காப்பது இமைபோல
மண்ணைக் காத்த இமையவனே
விண்ணில் தோன்றிய விடிவெள்ளி போல
விடியலை நோக்கிய புலிவீரனே
மண்ணைக் காத்த மறவனே
மரணத்தை வரவேற்ற மாவீரனே

இவர்களுடன் வைத்தியசாலையில் இறந்த சேவையாளர்களையும், போராளிகளையும் நினைவு கூருகின்றோம்,


இவர்கள் மறுபிறப்பில் எங்கள் குடும்பத்தில் வந்து சேர ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பத்திரகாளி கோவிலடி,
யோகேஸ்வரன் வீதி,
பருத்தித்துறை;

- குடும்பத்தினர்.
[9921]

## 45-ம் நாள் கண்ணீர் அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றிநவிலலும்

பிறப்பு
05-07-1974



வீரச்சாவு
19-09-1994

கடற்கரும்புலி
**கப்டன் லக்ஸ்மன்/இசைவாணன்**
**(குகதாசன் பிரணவன்)**
நல்லூர் தெற்கு, யாழ்ப்பாணம்
பழைய மாணவன், யா-கனகரட்ணம் மத்திய மகாவித்தியாலயம்

அரவணைத்த அன்னைதனைப் பிரணவனே மறந்தாயே
அரனவனின் துணையோடு ஆழ்கடலிற் பாய்ந்தாயோ
உரமுடைய உன்வீரம் இசைவாணா எங்கனுமே
கரகோஷம் செய்கிறதே காற்றோடு கலந்தாயே.
ஊர்புகழும் லக்ஸ்மனே நீ ஊராரும் உற்றாரும்
பாரினிலே கலங்கிடவே போராடி மாவீரன்
பேருடனே பெற்றோரும் சோதரரும் பேதலிக்கச்
சீருடனே கரும்புலியாச் சீர்கரையிற் சேர்ந்தாயோ!

19-09-94இல் கற்பிட்டிக்கடலிலே இவருடன் வீரகாவியம் படைத்த லெப். கேணல் நளாயினி, மேஜர் மங்கை, கப்டன்வாமன் ஆகியோர்க்கும் எமது கண்ணீர் அஞ்சலிகள்

எமது மகனின் வீரச்சாவடைந்த செய்தி கேட்டு உருக்கத்துடன் ஓடி வந்து பல்வேறு வழிகளில் உதவிகள் பல புரிந்தும் எங்கள் கவலையில் பங்கு கொண்டும் அஞ்சலி நிகழ்வுகளிலும் பங்கு கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், போராளிகள் அனைவருக்கும் எமது உள்ளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் இன்று எமது வீட்டில் நடைபெறும் மதிய போசனத்திலும் பங்கு கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்;

29, முதலியார் லேன்,
நல்லூர் தெற்கு,
யாழ்ப்பாணம்.

-குடும்பத்தினர்.
(9943)

தீபாவளி வாழ்த்துக்கள்! தீபாவளி வாழ்த்துக்கள்!! தீபாவளி வாழ்த்துக்கள்!!!

தித்திக்கும்

# தீபாவளித் திருநாளில்

★

வாடிக்கையாளர்கள், வர்த்தக பிரமுகர்கள், அன்பர்கள்,

நண்பர்கள், ஆதரவாளர்கள்,



அனைவருக்கும்

# நல்வாழ்த்துக்கள்



★

# மருந்து

# பால்மா வகைகள்

# (தனியார்)

# வரையுள்ளது.

484, கேனல் கிட்டுசாலை, யாழ்ப்பாணம்.

(சி-10608)

★

மக்களின் தேவைகருதி உங்களுக்கு மிக அருகாமையில் அமைந்துள்ள சகோதர நிறுவனங்கள்

மருந்து பால்மா வகைகள்
(தனியார்) வரையுள்ளது
சங்கரத்தை சந்தி வட்டுக்கோட்டை

மருந்து பால்மா வகைகள்
(தனியார்) வரையுள்ளது
பிரதான வீதி, சித்தன்கேணி.

மருந்து பால்மா வகைகள்
(தனியார்) வரையுள்ளது
ஊறணி, வல்வெட்டித்துறை.

மருந்து பால்மா வகைகள்
(தனியார்) வரையுள்ளது
யாழ்வீதி, கிளிநொச்சி.

மருந்து பால்மா வகைகள்
(தனியார்) வரையுள்ளது
முருங்கன் வீதி, மன்னார்.

வடமராட்சி மக்களுக்கு

**எமது தீபாவளி வாழ்த்துக்கள்**

ஈழநாதம் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரிக்க யாழ்ப்பாணம் செல்ல வேண்டியதில்லை எம்முடன் தொடர்பு கொண்டு அதே கட்டணத்தில் விளம்பரம் செய்யலாம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

சகலவிதமான பத்திரிகை, சஞ்சிகை, நாவல்கள், பாடசாலை பொத்தகங்கள், உபகரணங்கள், காகிதாதி வகைகளையும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

**புதிய கலைக்களஞ்சியம்**

***(MODERN STORES)***

நெல்லியடிச்சந்தி,

கரவெட்டி.

(9752)

திருமாட்டி

தங்களது வாடிக்கையாளர்களுக்கு

தெரிவித்துக் கொள்ளும்

தீபாவளி வாழ்த்து

யாழ் நகரில்

நவயுகத்தின் துணியகம்

**திருமாட்டி புடவைக்கடல்**

**(சீமாட்டி)**

122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(சி-10620)

அன்பர்கள் நண்பர்கள் ஆதரவாளர்கள்.

வாடிக்கையாளர்களுக்கு எம் இனிய

தீபாவளி நல்வாழ்த்துக்கள்

**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை**

**ஸ்ரீ சுப்பிரமணிய அச்சகம்**

யாழ்ப்பாணம். (சி-10624)

ஆதரவாளர்கள் அன்பர்கள்

வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

எமது உளங்கனிந்த தீபாவளி

வாழ்த்துக்கள்

திறமையான சேவையுடன்

தரமான மூக்குக்கண்ணாடிகளுக்கு

**எரிக் கலோஷ்**

மூக்குக்கண்ணாடி விற்பனையாளர்

566, ஆஸ்பத்திரி வீதி

யாழ்ப்பாணம்

(சி- 10618)

நண்பர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவருக்கும்

எமது தீபாவளி வாழ்த்துக்கள்

வைத்திய நிபுணர்களின் ஆலோசனைக்கு ஏற்ற வகையில்

கண்ணாடிகளை தெரிவு செய்து கொள்வதற்கும்,

சிறந்த முறையில் பற்களைக் கட்டுவதற்கும் நீண்ட கால

அனுபவமுள்ள ஸ்தாபனம்

**P. J. பர்னான்டோ**



மூக்கு கண்ணாடியகம்

பல்கட்டும் நிலையம்

ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.



(சி-10617)

அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள்,

வாடிக்கையாளர்களுக்கு

எம் இனிய தீபாவளி

நல்வாழ்த்துக்கள்

தீபாவளி திருநாளில் உள்ளம் மயங்கி

சிந்தை குளிர்ந்திட

தேவையான பழைய, புதிய பாடல்களை

***COmpact Disc*** இல் ஒலிப்பதிவு

செய்து தருகின்றார்கள்

**ஜென்சி மியூசிக் சென்ரர்**

17, பஸ்நிலையம், யாழ்ப்பாணம்

(சி-10625)

**தொய்வு வைத்தியம்**

தொய்வு, முட்டு பீனிசம் போன்ற நோய்களுக்குப் புதிய நோயாளர்கள் காலை 9 - 12 மணிவரையும் மாலை 4 - 6 மணிவரையும் (ஞாயிறு தவிர) பார்வையிடப்படுவர்; டாக்டர். சுறாஜ் சோமசுந்தரம் (அஸ்மா சிகிச்சை நிபுணர்) 33, நாலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

9813

நாட்டின் நாலா பக்கங்களிலுமுள்ள

நமதன்பர்கள் · நண்பர்கள்

நல்லாதரவாளர்களிடையே

நட்பும் உறவும் வளர்ந்திட

நலமும் வளமும் மலர்ந்திட

இத்தீபாவளி நன்னாளில்

இறைவனை வேண்டுகின்றோம்.

**லலிதா பட்டுச் சோலை**

மங்கள வைபவங்களுக்கேற்ற

கூறைத்தினிசுகள் காஞ்சிபுரம்

பெனாரஸ், மைசூர் சிலக்ஸ் இவற்றுடன்

சேட்டிங், சூட்டிங்

பட்டுவேட்டி சால்வைகள்

கிப்ஸ்சாரம் பூட்டு சாரவகைகளுக்கும்

ஆகியவற்றுக்கு பெயர் போன ஸ்தாபனம்

**லலிதா பட்டுச் சோலை**

5, 6 சிறப்பு அங்காடி யாழ்ப்பாணம்.

(சி 10622)

**வாழ்த்துகின்றோம்**

வந்தனம் தந்தோருக்கும், வகைவகையாய் வாங்கி மகிழ்ந்தோருக்கும்.

அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்

எங்கள் உளங்கனிந்த தீபாவளி நல்வாழ்த்துக்கள்.

**விதுரா ஆடையகம்**

சிறப்பு அங்காடி (உட்புறம்) யாழ்ப்பாணம்

மங்கள வைபவங்களுக்கான கூறைச்சேலைகள், பட்டுவேட்டிகள், காஞ்சிபுரம், மற்றும் பஞ்சாபி வகைகளுடன் சிறுவர் முதல் முதியோர் வரையிலான சகல ஆடைகளையும் தரமுடனும், நயத்துடனும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டியது.

**விதுரா ஆடையகம்**

சிறப்பு அங்காடி (உட்புறம்) யாழ்ப்பாணம்

விதுரா ஆடையகம்

உரிமையாளர்களும்

ஊழியர்களும்

(சி-10615)

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள், ஆதரவாளர்கள், யாவருக்கும் உளம் கவர்ந்த இனிய தீபாவளி நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

★ **ராசி பட்டுச்சோலை** ★

70, 71 A சிறப்பு அங்காடி (நவீனசந்தை) யாழ்ப்பாணம்

யாழ் நகரில் புத்தம் புது டிசைன்களை அறிமுகப்படுத்துவதில் பெருமை அடையும் நாம் இந்த வரிசையில் ஐப்பசி மாத தினத்தில் சுப முகூர்த்த பட்டுக் கூறைகளை அறிமுகப்படுத்தியுள்ளோம் வெள்ளி ஜரிகையும், பொன் ஜரிகையும் சேர்ந்த சுத்த பட்டினால் ஆன கூறைகள் கைவசம் சொற்பமே;

சி/10626

### சிந்தனைக்கு

என்னுடைய அக்கறை அனைத்தும், எதிர்காலத்தில்- அதில் தானே, நான் என் வாழ்வில் எஞ்சிய பகுதியைக் கழிக்கப் போகின்றேன்

- சார்ள்ஸ் கெட்டெரிங்


# ஈழநாதம்

21, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 02- 11- 1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண் - 05


## பரஸ்பரத் தேவை

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் கடந்த ஐ.தே.க. அரசாங்கத்தில் சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவருமாக இருந்த திரு தொண்டமான், பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துடன் இணைந்து கொண்டதோடு, சுற்றுலாத்துறை அமைச்சராகவும் பதவி ஏற்றுக் கொண்டுள்ளார்.

திரு தொண்டமான் அமைச்சுப் பதவி ஏற்றதன் பின்பே பொது ஜன ஐக்கிய முன்னணி அரசாங்கத்துடன் இ.தொ.கா. இணைந்து கொள்கின்றது என்ற செய்தி வெளியாகியதில் இருந்தே அவர் அமைச்சுப் பதவியில் எத்தகைய நாட்டம் குறியாக இருந்துள்ளார் என்பதை புரிந்து கொள்ள முடியும். ஆனால் இது தொண்டமானைப் பொறுத்து அறிந்திருப்பவர்களுக்கு ஆச்சரியம் அளிக்கக் கூடிய விடயம் ஒன்றல்ல.

பொ.ஐ.மு. அரசாங்கத்தில் தொண்டமானை இணைத்துக் கொள்வது தொடர்பாக ஏற்கனவே பேச்சுவார்த்தைகள் இடம் பெற்றதாயினும் அமைச்சுப் பதவி தொடர்பான விடயத்தில், இழுபறி நிலை ஒன்று இருந்தே வந்தது. அத்தோடு மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன், முன்னாள் அமைச்சரான செல்லச்சாமி போன்றோர் பொ ஐ முன்னணியுடன் நட்பாக இருந்ததன் காரணமாக அது குறித்தும் கவனத்திற் கொள்ளப்பட்டிருந்தது.

ஆனால் காமினி திசாநாயக்காவின் கொலையுடன் மாறிய அரசியற் சூழ்நிலையானது பொ.ஐ.மு. நிலைப்பாட்டிலும், தொண்டமானின் நிலைப்பாட்டிலும் மாற்றத்தை ஏற்படுத்தின. தொண்டமானுக்கு அமைச்சர் பதவி வழங்க பொ. ஐ.முன்னணி தயாரான வேளை அமைச்சர் தொண்டமானும் தனது நடுநிலைமை என்ற நிலைப்பாட்டை மாற்றிக் கொண்டுவிட்டார் இதில் எது முதல் நடந்தது என்பதை தற்பொழுது எம்மால் கூறமுடியாது

பொ.ஐ. முன்னணியை பொறுத்து காமினி திசாநாயக்காவின் மரணம் ஜனாதிபதித் தேர்தலில் தமக்குப் பாதகமான விளைவுகள் ஏற்பட்டுவிடுமோ என்ற அச்சத்தை ஏற்படுத்தியிருப்பதையே இது காட்டுவதாக உள்ளது. அனுதாப அலை ஒன்று திருமதி சிறிமா திசாநாயக்காவின் பக்கம் வீசலாம் என்பதே இவ் அச்சத்திற்குக் காரணமாகும்.

இந்நிலையில் திரு. தொண்டமானை இணைப்பது தொடர்பான விடயத்தில் ஏனைய முரண்பாடுகள் யாவற்றையும் ஒதுக்கித் தள்ளி வைத்துவிட்டு அமைச்சுப் பதவியை வழங்க பொ.ஐ.மு. முன்வந்தது எனலாம். இம்முடிவானது மலையகத்தில் ஊசலாடிக் கொண்டிருந்த பொ.ஐ.முன்னணியின் வாக்கு வேட்டைக்குப் பெரிதும் உதவக் கூடியது என்பதில் சந்தேகமில்லை.

அதிலும் காமினி திசாநாயக்காவின் ஆதரவுத்தளமுள்ள மலையகத்தில், தொண்டமான் நடுநிலைமை வகிக்கும் பட்சத்தில் பெருமளவு வாக்குகள் ஐ.தே.க விற்குச் சென்றடைவது தவிர்க்க முடியாதே போய்விடும். இந்நிலையிலேயே பொ. ஐ. மு. தொண்டமானை இணைத்துக் கொள்ளவும் அமைச்சுப் பதவி வழங்கவும் முன்வந்தது.

இதேசமயம் தொண்டமானைப் பொறுத்தும் ஐ.தே.க. இனிமேல் நம்பிக்கை ஊட்டும் ஒரு கட்சியாக இல்லை. காமினி திசாநாயக்கா இருந்தவரையில், தொண்டமானைப் பொறுத்து ஒரு நம்பிக்கையும், சலனமும் இருக்கத்தான் செய்தது. ஆனால் காமினி திசாநாயக்காவின் மரணம் அவருக்கு ஐ. தே. க. விற்கு எதிர்காலம் ஒளிமயானதாக இல்லை என்று எண்ண வைத்திருக்க வேண்டும்.

அத்தோடு பொ ஐ.மு. அரசாங்கத்திற்குள் புகுவதன் மூலம் மலையகத்தில் தோன்றிய புதிய தலைமைகளையும் ஓட்டம் காணச் செய்து விட முடியும். இது அவரின் எதிர்கால அரசியல் வாழ்விற்கு அத்தியாவசியமானதும் கூட இந்நிலையிலேயே தொண்டமான் பொ.ஐ.மு. வழங்க முன்வந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டுள்ளார் எனலாம்.

தொண்டமான் இணைந்தது பொ. ஐ. முன்னணிக்கு வாக்குவேட்டைக்கும், சிறுபான்மை அரசாங்கத்தின் தளம்பல் நிலைக்கும் மற்றும் கூட்டாக உள்ள சிறுகட்சிகளின் அச்சுறுத்தலைப் போக்க உதவக்கூடும். ஆனால் முன்னாள் ஐ.தே.க அமைச்சர்களின் ஊழல் மோசடிகள் பற்றி நிறையவே பேசும் பொ.ஐ.மு. தொண்டமானை இணைத்துக் கொண்டதன் மூலம் இந்தப் பட்டியலில் பலரைத் தவிர்க்கவேண்டி வரலாம். அத்தோடு அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு கொள்கைக்கு / பேச்சிற்கு அப்பாற்பட்ட வகையிலும் சந்திரிகா தலைமையிலான பொ.ஐ.மு. தயாராகவுள்ளது என்பதையும் வெளிப்படுத்துவதாயுள்ளது.

# வடக்கு-கிழக்கு ராணுவ முகாம்கள் எதையும் மூடும் எண்ணம் இல்லை

### தாக்குதல் தொடரும் என்கிறார் ரத்வத்த

(கொழும்பு)
வடக்கு- கிழக்கில் இருக்கின்ற இராணுவமுகாம் எதனையும் மூடிவிடும் நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லை பாதுகாப்பு நடவடிக்கைகளும் நிறுத்தப்படமாட்டாது இவைகளின் மத்தியில்தான் பேச்சுக்களை நடத்துவோம் என பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த தெரிவித்தார்.

அரசாங்கம் இப் பிரச்சினை தொடர்பாக மிகவும் தெளிவாகவே உள்ளது. சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்று வரும் வேளையிலும் எமது நிலைகளில் எவ்வித மாற்றமும் இல்லை. வடக்கு-கிழக்கு இராணுவ முகாம்கள் அகற்றப்படமாட்டாது பாதுகாப்பு நடவடிக்கைகள் நிறுத்தப்படமாட்டாது. இவைகளின் மத்தியில்தான் நாம் பேச்சுக்களை நடத்துவோம் என மேலும் அவர் தெரிவித்தார். அப்பேட்டியில்,

கேள்வி: சமாதான பேச்சு-வார்த்தைகள் ஆரம்பமாவதற்கு பின்னணியில் அரசாங்கம் கைதுசெய்த விடுதலைப்புலிகள் என சந்தேகிக்கப்பட்டவர்களை பெரிய அளவில் விடுதலை செய்ததா?

பதில்: சமாதான பேச்சுவார்த்தையை விரும்பாத சில குழுவினர் பொய்யான பிரசாரங்களை வழங்கி வருகின்றனர் விடுதலைப்புலிகள் உறுப்பினர் எவரையும் நாம் விடுதலை செய்யவில்லை.

சிறைச்சாலைகளிலும் தடுப்பு முகாம்களிலும் நீண்டகாலமாக விசாரணை இன்றி தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகளை மக்களிற்கு தேர்தல் காலத்தில் கொடுத்த வாக்குறுதிகளிற்கு அமைய விடுதலை செய்யப்பட்டது இதைத்தவிர எந்த ஒரு சிறைக்கைதிகளையும் நாம் விடுதலை செய்யவில்லை

## ஜனாதிபதி தேர்தல் பாதுகாப்பிற்கு 500 பொலிசார் வடபகுதி விரைவு

யாழ்ப்பாணத்தில் தேர்தல் அதிகாரிகளுக்கு பாதுகாப்பு வழங்குவதற்கென 200 பொலிசார் நேற்றுமுன்தினம் வடபகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக பிரதி பொலிஸ்மா அதிபர் இக்னேசியஸ் கனகரட்ணம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இராணுவ கட்டுப்பாட்டு பிரதேசங்களில் 157 வாக்குச்சாவடிகள் அமைக்கப்படும் எனவும் மேலும் 250 பொலிசார் இவ்வாரம் யாழ்ப்பாணம் அனுப்பி வைக்கப்படுவர் எனவும் கனகரட்ணம் மேலும் தெரிவித்தார்.

ஊர்காவற்றுறை காங்கேசன்துறை, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் வாக்குச்சாவடிகள் அமைக்கப்படும் எனவும் தேவை ஏற்படின் மேலும் பொலிசார் அனுப்பிவைக்கப்படுவர் எனவும் அவர் தெரிவித்தார்.

## ஒருவாரத்துக்கு முன்பே குண்டு கொழும்பு வந்தது

### பொலிசார் கூறுகின்றனர்

(கொழும்பு)
காமினி திசாநாயக்காவின் கொலைக்குக் காரணமான குண்டு ஒருவாரத்திற்கு முன்பே வடக்கில் இருந்து கொழும்பிற்கு கொண்டுவரப்பட்டதாக பொலிஸ் விசாரணைகள் தெரிவிக்கின்றன.

குண்டு வெடிப்பிற்கு ஒரு வாரத்திற்கு முன்பு விடுதலைப்புலிகளின் வெடிகுண்டு குழு கொழும்பு நகரத்திற்குள் புகுந்துள்ளனர் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிசார் தமிழ் இளைஞர் யுவதிகளை கைதுசெய்து விசாரணைகளை நடாத்தியிருந்ததாகவும் இருந்தும் குண்டு வெடிப்பை தம்மால் தடுக்க முடியவில்லை. என சிறிலங்கா பொலிஸ் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது.

## பொலிஸ் குழு மீது இனம்தெரியாத குழு தாக்கு

### ஒரு பொலிசார் பலி; நால்வர் காயம்

(கேகாலை)
கேகாலையிலுள்ள அந்திரிகம பகுதியில் குற்றவாளிகள் குழு ஒன்று பொலிஸ் குழு ஒன்றின்மீது தாக்குதல் நடத்தியபோது பொலிசார் ஒருவர் கொல்லப்பட்டதுடன் நான்கு பொலிஸ் கான்ஸ்டபிள்கள் படுகாயமடைந்தனர் என கேகாலை பொலிசார் அறிவித்துள்ளனர்.

இதுவரை இத்தாக்குதல் குறித்து எவரும் கைது செய்யப்படவில்லை பொலிசார் இதுகுறித்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## கடும் மழையினால் அகதிகள் திண்டாட்டம்

(யாழ்ப்பாணம்)
தீவக மக்கள் தங்கியுள்ள அரியாலை மணியரசன் குடியிருப்பில் தற்போது பெய்து வரும் மழையினால் மக்கள் பெரும் அவலங்களைச் சந்தித்து வருவதாக தெரிவிக்கப் படுகின்றது. குடியிருப்பில் உள்ள குடிசைகள் அனைத்தும் கடந்த வருடம் வேயப்பட்டவை ஆயினும் கிடுகுகள் தரமற்றவையாதலால் பெரும்பாலான குடிசைகள் ஒழுக்கு நிறைந்தவையாக காணப்படுகின்றன கடந்த வருடத்தில் பெய்தது போன்ற பெருமழை பெய்யின் மக்கள் வீடுகளை விட்டு 'குடியெழும்ப' வேண்டியிருக்கும் எனவும் தற்போது பெய்யும் மழைக்கே சில குடிசைகளுக்குள் குடை பிடித்துக் கொண்டு இருக்க வேண்டிய நிலை நிலவுவதாகவும் குடியிருப்பு நிர்வாகத்தினர் தரப்பில் கூறப்பட்டது. (22)

## கமரூச் இயக்கத்தினரால் 46 மக்கள் படுகொலை

கம்போடியாவில் கமரூச் இயக்கத்தினர் 46 கிராமவாசிகளைப் படுகொலை செய்துள்ளதாக கம்போடிய அரசு தெரிவித்துள்ளது.

கம்போடியாவின் வடமேற்கு மாகாணத்தில் இச்சம்பவம் இடம் பெற்றதாக கமரூச் இயக்கத்தினரால் பிடித்துச் செல்லப்பட்டவர்களில் தப்பி வந்த சிலர் தெரிவித்ததாக அரசு கூறுகின்றது.

அமெரிக்க போர்க் கப்பல்

## தாய்லாந்து கடலில் தரிக்க அரசு அனுமதி மறுப்பு

தாய்லாந்து கடற்பரப்பில் அமெரிக்க விமானம் தாங்கிக் கப்பலை நிறுத்துவதற்கு தாய்லாந்து அரசு அனுமதி வழங்க மறுத்துள்ளது.

தாய்லாந்திற்கு விஜயம் செய்திருந்த அமெரிக்க கடற்படையின் பகுதிப்பிராந்தியத் தளபதி தாய்லாந்து பிரதமரிடம் இது குறித்த வேண்டுகோளை விடுத்திருந்தார்

கடற்படை தளபதியின் இவ் வேண்டுகோளை தாய்லாந்து அரசு முற்றாக நிராகரித்து விட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## இந்திய கிரிக்கட் அணியில் பிரபாகர், நயன் நீக்கம்

[சென்னை]
மூன்று நாடுகளுக்கு இடையிலான ஒருநாள் கிரிக்கட்போட்டித்தொடரில் இந்திய அணியிலிருந்து மனோஜ் பிரபாகரும் விக்கட் கீப்பர் நயன் மொங்கியாவும் நீக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குப் பதிலாக கர்நாடகத்தின் ரர்குமாரவிடும் ஹரியானாவின் விஜய்யாதவ்வும் இந்திய அணியில் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்டிருப்பதாக இந்திய கிரிக்கட் கட்டுப்பாட்டுச்சபை செயலாளர் அறிவித்துள்ளார்.

### கண்டெடுப்பு

திருச்செல்வம் வசந்தரூபி என்பவருடைய அடையாள அட்டை (இல: 546021572V) வடபகுதிக்கு நுழைவோருக்கான அனுமதிச்சீட்டு மற்றும் ஆவணங்களுடன் கிளாலியில் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

★ ★ ★

நாவலர் வீதியில் கண்டெடுக்கப்பட்ட மூக்குக் கண்ணாடி ஒன்று மரியதாஸ் என்பவரால் ஈழநாதத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளவும்.

## தேர்தல் கடமையில் 1 லட். அதிகாரிகள்

சிறிலங்காவில் நடைபெறவுள்ள ஜனாதிபதித்தேர்தலின் போது ஒருலட்சம் அதிகாரிகள் தேர்தல் கடமையில் ஈடுபடுவார்கள் என தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.

## ஹேமாவை நியமிப்பதில் ஐ.தே.க.விற்கு ஆர்வமில்லை

குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட ஐ தே க பாராளுமன்ற உறுப்பினர்களான ஜீ எம்- பிரேமச்சந்திரா, டாக்டர் காமினி விஜேசேகர ஆகியோரின் இடத்திற்கு ஐ-தே- க விரைவில் புதியவர்களை நியமிக்கவுள்ளது-

இவ் இடங்களுக்கு ஐ தே கவின் பிரதிச்செயலாளர் தஹம் விமலசேன, திலக் மாரப்பன ஆகியோர் பெயர்களே பரவலாக அடிபடுகிறது

இதேவேளை திருமதி ஹேமா பிரேமதாசாவை பாராளுமன்ற உறுப்பினராக நியமிப்பது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி அதிக அக்கறை காட்டவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது

# மாணவர்களின் இடைவிலகலை தடுப்பது பெற்றோரின் கடமை

### -பிரதம அதிதி உரை

(வடமராட்சி)
இந்த வித்தியாசாலையில் கல்வி கற்கின்ற மாணவர்களில் நான்கில் மூன்று பங்கு மாணவர்கள் தமது கல்வியை இடை நிறுத்தி தமது கைங்கரியங்களுக்கு செல்கின்றனர் இந்த நடவடிக்கையை பெற்றோர் தடுத்து நிறுத்தி தமது பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு அயராது பாடுபட வேண்டியது அவசியமாகிறது

வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலையின் அதிபர் திரு த- தவேந்திரராசா தலைமையில் நடைபெற்ற பெற்றோர் தின விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட பருத்தித்துறை கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு- வே- தி செல்வரட்ணம் முன்கண்டவாறு குறிப்பிட்டார்-

அவர் அங்கு மேலும் குறிப்பிடும் போது ஆரம்பக்கல்வியை கற்கின்ற ஒவ்வொரு மாணவர்களும் க. பொ. த சாதாரணம் வரையிலாகுதல் கல்வியை தொடர வேண்டும் இதனை பொருட்படுத்தி மாணவர்களை கல்லூரிக்கு ஒழுங்காக பெற்றோர் அனுப்பி வைக்க வேண்டும்

இந்தப்பாடசாலை தரம் 11க்கு தரம் உயர்ந்து பருத்தித்துறை கோட்டத்தில் முதலாமிடத்தை வகிக்கின்றது இப்பாடசாலை தரம் உயர்ந்த போதிலும் ஆசிரியர்கள் பற்றாக்குறை இருந்துள்ளது. இங்கு சேவையாற்றிய சில ஆசிரியர்கள் தமது சொந்த நலனுக்காகவும் சுயநலத்துக்காகவும் இந்தப்பாடசாலையை விட்டுவெளியேறியமையினால் ஆசிரியர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது

அடுத்த வருடம் இந்தப் பாடசாலை ஆசிரியர் பற்றாக்குறையை ஓரளவு தீர்த்து வைக்க ஆவன செய்ய முயற்சிக்கின்றேன் அடுத்த வருடத்தில் பட்டதாரி ஆசிரியர்கள் சிலரும் ஆரம்ப ஆசிரியர்கள் சிலரும் எமது கோட்டத்திற்கு வர இருக்கின்றனர்

இந்தப்பாடசாலை தரம் உயர்ந்த பின்னர் மாணவர்களின் பருமன் உயர்ந்துள்ளது இந்தப் பாடசாலையைச் சூழவுள்ள பாடசாலை மாணவர்கள் இங்கு வந்து கல்வி கற்பதால் இப்பருமன் அதிகரித்திருக்கிறது அதேசமயம் சூழவுள்ள பாடசாலைகளில் ஒரு சில மூடவேண்டிய நிலைஏற்படுகின்றது இதனை தடுக்கும்நோக்கோடு இந்தப்பாடசாலையில் மாணவர்களின் தொகையை தொளாயிரமாக மட்டுப்படுத்தவுள்ளோம்

இந்தக்கல்லூரி தரம் உயர்த்தப்பட்டுள்ளதால் கல்வியில் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது இதற்கு காரணமாக இருந்தவர்கள் இங்குள்ள ஆசிரியர்கள் அதிபர் அவர்களின் திறமையென எடுத்துக்காட்டுகிறது இந்தப்பாடசாலை கல்வியில் மட்டுமல்ல விளையாட்டுக்களிலும் தரத்தை உயர்த்தியுள்ளது இதற்கு மூலகாரணமாக இருந்த இப்பாடசாலை ஆசிரியர்கள் தமது சுயதேவைகளைப் பூர்த்தி செய்யாது மாணவர்கள் மீது அவதானமாக இருந்து மாணவர்களை ஒழுக்கமுள்ளவர்களாக மிளிரவைத்த இந்தப் பாடசாலை ஆசிரியர் சமுதாயத்தை மனமகிழ்வோடு பாராட்டி வாழ்த்துகிறேன் என்றார்.

தொடர்ந்து சிறப்பு விருந்தினர்கள் பலரும் உரையாற்றினர் இறுதியில் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெற்றன போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்ற மாணவர்களுக்குபிரதம அதிதி பரிசில்களை வழங்கி கௌரவித்தார். (வே)

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994 - 11 - 02**

**புதன் இரவு**

08.01 - குயிலோசை - குருநகர் ஜெ ஜெனார்த்தனன் எழுதிய ''மரபுவழி கூத்துக்களில் அரசன் பாடல்கள்'' நாட்டுக்கூத்து
08.20 - ஏர்முனை- நிகழ்ச்சியில் ''ஒழுங்கிணைந்த பீடை முகாமைத்துவம்'' கேள்வி பதில்
08.30 - செய்திகள்
08.40 - நாடகம்-ப. உதயகுமார் எழுதிய ''மூடநம்பிக்கை''
09.00 - மணிக்கு இரவு நிகழ்ச்சிகள்யாவும் நிறைவு பெறும்.

**1994-11-03**

**வியாழன் காலை**

07.02 - மாவீரவணக்கம்
07.15 - விடுதலை கீதங்கள்
07.30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - விடுதலை கீதங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி
08.00 - மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்;

வெள்ளை மாளிகைமீது சூடு

## கைதான சந்தேக நபர்மீது நான்கு குற்றச்சாட்டுக்கள்

(வாஷிங்டன்)
வெள்ளை மாளிகை மீது சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக குற்றம் சாட்டப்பட்டுள்ள நபர் மீது நான்கு குற்றங்கள் சுமத்தப் பட்டுள்ளன.

பிரான்சிஸ்கோ மாட்டின் டுரான் என்ற இந்த சந்தேக நபர் மீதான ஆரம்ப நீதிமன்ற விசாரணைகளின் பின்னர் அமெரிக்க வழக்கறிஞர் தகவல் தருகையில் சந்தேக நபர் குற்றச்சாட்டுகளில் தன்னைப் பற்றி விளங்கிக்கொண்டுள்ளாரா என்பதையும்தனது சொந்தக் கட்டுப்பாட்டு நடவடிக்கையில் உள்ளாரா என்பதையும் உறுதிப்படுத்துவதற்காக அவர் உளவியல் பரிசோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும் என வழக்குத் தொடுநர்கள் வேண்டுகோள் விடுத்திருப்பதாகத் தெரிவித்தார்.

சூறாவளிக்கு பலியான

## 15 பேரின் குடும்பங்களுக்கு தமிழக அரசு நிதிஉதவி

சென்னையிலும் அதனை சூழவுள்ள பகுதிகளிலும் நேற்று முன்தினம் வீசிய சூறாவளிக்கு பலியான 15பேரின் குடும்பங்களுக்கு தலா 10ஆயிரம் ரூபாவை நிவாரண உதவியாக வழங்கிட முதல்வர்ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இதே வேளை கடும் சூறாவளியால் பாதிக்கப்பட்டு புற இடங்களில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு சமைத்த உணவுகள் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது-

## யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
## நூற்றாண்டு மலர்

யாழ். இந்துக் கல்லூரியின் நூற்றாண்டு மலரினை காலம் பிந்திய நிலையிலாவது வெளியிடுவதற்கு கல்லூரிச் சமூகம் தீர்மானித்து அதனை வெளியிட நூற்றாண்டு மலர்க்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. கல்லூரியின் நூற்றாண்டு காலத்து முழுமையான தகவல்களைப் பெற்றுக்கொள்வதில் சிரமம் காணப்படுகின்றது. எனவே இக்குழு நூற்றாண்டு மலரில் வெளியிடக் கூடிய கல்லூரி சம்பந்தமான தகவல்கள், விபரங்கள், முக்கிய நிகழ்வுகள் போன்றவற்றை பழைய மாணவர்கள், நலன்விரும்பிகளிடமிருந்து பெற விரும்புகின்றது. எனவே இவற்றை வைத்திருப்பவர்கள் தயவு செய்து 15-11-1994ஆம் திகதிக்கு முன்னர் மலர்க் குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்;

தலைவர்
மலர்க்குழு
யாழ்: இந்துக் கல்லூரி

யாழ்ப்பாணம்
(சி/10635)


# ஜனாதிபதி முதல் பல தலைவர்களை வன்முறையில் இழந்துள்ளோம்

## ஐக்கிய தேசியக் கட்சி கவலை

(கொழும்பு)
வன்முறைகளுக்கு ஐக்கிய தேசியக்கட்சியின் முக்கிய தலைவர்கள் கடந்த பத்தாண்டுகளில் பலியாகியிருக்கிறார்கள். கட்சியின் தலைவரான ஜனாதிபதி தொட்டு மூன்று பொதுச் செயலாளர்களான ஹரிஷ அபேவர்த்தனா, ரஞ்சன் விஜேரத்னா, காமினி விஜேசேகரா என இழந்திருக்கிறோம்- இன்று எமது கட்சியின் பிரதித் தலைவரும் கொல்லப்பட்டு விட்டார் என ஐ; தே. க. வெளியிட்ட அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.
இதனைவிட கட்சியின் முன் வரிசைத் தலைவர்கள் பலரையும் நாம் இழந்துவிட்டோம் எனவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ராணுவ அதிகாரிகளுக்கு விரைவில் இடமாற்றம்

(கொழும்பு)
ஜனாதிபதி தேர்தலின்பின் சிறிலங்கா இராணுவ அதிகாரிகள் மட்டத்தில் பல இடமாற்றங்கள் ஏற்படுத்தப்பட இருப்பதாக சிரேஷ்ட இராணுவ அதிகாரியொருவர் சிங்களப் பத்திரிகை ஒன்றுக்குத் தெரிவித்துள்ளார்.
இவ் இடமாற்றங்கள் தொடர்பான பூர்வாங்க திட்டங்கள் தயாராக உள்ளதாகவும் ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்ததும் இத் திட்டங்கள் நடைமுறைக்குவரும் எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## ஒன்றுபட்டு ஆதரவு வழங்க சிறிமா கோரிக்கை

(கொழும்பு)
ஐ. தே. கவின் ஜனாதிபதி வேட்பாளர் திருமதி சிறிமா திசாநாயக்கா நேற்றுக்காலை ஐ. தே. க. பாராளுமன்ற உறுப்பினர்களை சந்தித்து பேச்சு நடத்தினார்.
நேற்றுக் காலை 9.00 மணியளவில் பாராளுமன்றில் அவர் ஐ. தே. க. எம். பிகளை சந்தித்து பேசியதாகவும் இச் சந்திப்பின் போது அனைத்து ஐ. தே. க. உறுப்பினர்களும் ஒன்றுபட்டுதமக்கு ஆதரவுவழங்க வேண்டும் எனவும் சிறிமா திசாநாயக்கா, அவர்களை வேண்டிக் கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## நோயாளர் கவனத்திற்கு

(யாழ்ப்பாணம்)
நரோமா கப்பல் மூலம் நாளை வியாழக்கிழமை பயணம் செய்வதற்காக பணம் செலுத்திய பயணிகளை அன்று காலை 8 மணிக்கு பருத்தித்துறை இறங்கு துறைக்கு சமுகமளித்து தமது பயணத்தை உறுதி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (சி

## மட்டு மாவட்டத்திற்கு இரு புதிய படை அதிகாரிகள்

(கொழும்பு)
மட்டக்களப்பு மாவட்டத்தில் இரு புதிய இராணுவ அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர் மட்டக்களப்பு மாவட்டத்தின் 3 ஆம் படைப்பிரிவின் பொறுப்பதிகாரியாக பிரிகேடியர் சரத்பொன் சேகா நியமிக்கப்பட்டுள்ளார்.
வாழைச்சேனை, தொப்பிகல, வாகரை பகுதிகளின் பொறுப்பதிகாரியாக கேணல் கே. பி. எக்கடகொல நியமிக்கப்பட்டுள்ளார்.
இதே சமயம் கடமையின் போது மரணமான புத்தள மாவட்ட இராணுவ பொறுப்பதிகாரி பிரிகேடியர் பொடிமாத்தயாவிற்கு பதிலாக கேணல் ஐவன் தசநாயக்கா நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இராணுவ பொலிசை சேர்ந்தவராவார்.
மட்டக்களப்பு மாவட்ட 3ஆம் படைப் பிரிவு பொறுப்பதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ள பிரிகேடியர் சரத்பொன்சேகா இதுவரை யாழ்ப்பாண மாவட்டத்தில் 25 ஆம் படைப் பிரிவிற்குபொறுப்பதிகாரியாக இருந்தமை குறிப்பிடத்தக்கது


யாழ் மீட் - ரவுண் றோற்ரறக்ற் கழகம் நடாத்தும்

## உதைபந்தாட்டம்

தீபாவளி தினத்தை முன்னிட்டு மீண்டும் இடை நிறுத்தப்பட்டிருந்த போட்டிகள் யாவும் ஆரம்பிக்கப்பட உள்ளன- இதில் இன்று மாலை 3-00 மணிக்கு யா/ பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் மோதும் அணிகள்:
★ சென் அன்ரனீஸ் எதிர் ஜங் கென்றீஸ்
★ சென் மேரீஸ் எதிர் றோயல்ஸ்

அழகு சாதனப் பொருட்களை பெற்றுக்கொள்ள

| ஜெயா அழகு மாடம் | ஜெயா அழகு மாடம் |
|---|---|
| 177, இராசன் தெரு, | 187, இராசன் தெரு, |
| (மின் நிலைய வீதி) | (மின் நிலைய வீதி) |
| யாழ்ப்பாணம். | யாழ்ப்பாணம். |

(9969)


## குண்டு வெடிப்புத் தொடர்பாக பாராளுமன்றில் விவாதிக்க சபாநாயகர் மறுப்பு

(கொழும்பு)
பாலத்துறை குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக விரிவான விவாதமொன்றை பாராளுமன்றத்தில் நடத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் விடுத்த வேண்டுகோளை பாராளுமன்றச் சபாநாயகர் நிராகரித்துள்ளார்.
இது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் டிரோன் பர்னாண்டோ கொண்டுவந்த பிரேரணை சபாநாயகரால் நிராகரிக்கப்பட்டது:
கடந்த 26ஆம் திகதி நடைபெற்ற இக்குண்டு வெடிப்பில் எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசாநாயக்காஉட்பட நான்கு ஐ தே க பாராளுமன்ற உறுப்பினர்கள் கொல்லப்பட்டமை தெரிந்ததே:

## மாணவர் அரங்கு நாளை

வாரப்தோறும் புதன் கிழமைகளில் வெளிவரும் மாணவர் அரங்கு இவ் வாரம் மட்டும் நாளை வியாழக்கிழமை வெளிவரும்என்பதனை அறியத் தருகின்றோம்

## திருத்தம்

இன்றையஈழநாதம் தினசரியின் சில பிரதிகளில் 3ஆம் பக்கத்தில் வெளிவந்துள்ள விளம்பரமொன்றில் வே. சி. சம ளஞ்சியம் என பிரசுரமாகியுள்ளதை வே சி. ம. களஞ்சியம்என திருத்திவாசிக்கவும்.

## நிவாரண பொருள் விநியோகம்

செப்ரெம்பர் முதல் இருவார நிவாரணத்திற்குரிய பொருள்கள் செயலக புனர்வாழ்வு பகுதியினரால் பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது.

## மலேரியா

கட்டுப்படுத்தப்படாத நிலையில் இருப்பதாகவும் தெரிய வருகின்றது பூச்சியியல்நிபுணர்கள் பல ஆண்டுகளாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தராததாலும் நவீன தொழினுட்ப உபகரணங்கள் இங்கு இல்லாததாலும் இப்புதிய வகை நுளம்புகளை கட்டுப்படுத்தும் ஆய்வுகளை தொடர்ந்தும் மேற்கொள்வது சிரமமானதாக இருப்பதாக பிராந்திய வைத்திய அதிகாரி டாக்டர் சிவகுரு தெரிவித்துள்ளார் எனவே மலத்தியோன் வந்து சேர்ந்தாலும் மலேரியாநோயைபரப்பும்இப் புதிய வகை நுளம்பை ஒழிக்க முடியாத நிலை உள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார் தி. இ

## இந்தியப்

திருமதி சிறிமா திசாநாயக்காவுக்கு இது தொடர்பான பதிலை நேற்று பிரதமர் சந்திரிகா குமாரதுங்க அனுப்பி வைக்க இருந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்
திருமதி சிறிமாதிசாநாயக்கா தனது வேண்டுகோளில் குறிப்பிட்ட சி பி ஐயின் விசேடவிசாரணைக் குழுத் தலைவர் கார்த்திகேயன். அப்புலனாய்வு தடய பிரிவு பொலிஸ் உயரதிகாரி பேராசிரியர் பி சந்திரசேகரன் ஆகிய அதிகாரிகளையே அனுப்பி வைக்குமாறு இந்திய அரசிடம் உடனடியாக கேட்கப்படவிருப்பதாகவும் பேராசிரியர் ஜீ எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## அனாதரவான

வல்லவர்கள் நல்லவர்களாக, நேர்மைத் திறன் உள்ளவர்களாக இருக்க வேண்டும்: அப்படியான சிறந்த மனிதர்களை, முழு மனிதர்களாக உருவாக்குவதே அறிவுச் சோலையின் இலட்சியமாக அமைய வேண்டும்.
எதிரியின் அழிப்பு வேலைகளுக்கு மத்தியில் நாம் ஆக்க வேலைகளை செய்து வருகிறோம். போர்ச் சூழலால் குடும்பம் சிதைந்து, அனாதரவான நிலைக்கு ஆளாகும் சிறார்களை எமது இயக்கம் அரவணைத்துக் கொள்கிறது அவர்களை சிறந்த முறையில் வளர்த்தெடுக்க பராமரிப்பு இல்லங்களையும் பயிற்சிப் பள்ளிகளையும் நடத்தி வருகிறது- தமிழீழத்தின் எதிர்காலத் தலைவர்களாக, அறிவு ஜீவிகளாக, சமூக நிர்மாணிகளாக இவர்களை வளர்த்தெடுப்பதே எமது நோக்கம்-
எனது இலட்சியக் கனவை நிறைவு செய்யும் வகையில், ஒரு உறுதியான அத்திவாரத்தைக் கட்டி எழுப்பி, அறிவுச் சோலை செயற்பட்டு வருகிறது. ஓராண்டுகால இடைவெளிக்குள் இந்தச் சிறுவர் இல்லம் பிரமாதமான வளர்ச்சி கண்டிருப்பதையிட்டு நான் பெருமகிழ்ச்சி கொள்கிறேன். பரிசோதனைக் கல்விக்கும், பராமரிப்பிற்கும் முன்னுதாரணமாக திகழும் அறிவுச் சோலையின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு அயராது உழைத்துவரும் அதன்பொறுப்பாளருக்கும்ஆசிரியர்களுக்கும் ஏனையோருக்கும் எனது பாராட்டுக்கள்,
அறிவுச்சோலை வெளியிடும் ஆண்டு மலருக்கும் எனது நல்லாசிகள்.

## சந்தேகத்திற்குரிய

கைகளில் வெளிவந்த சந்தேகத்திற்குரிய பெண்ணை தனக்கருகில் இருந்தவர் என பொலிசில் அடையாளம் காட்டியபோது மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
இதேவேளை, 150 பொலிஸ் அதிகாரிகள் குண்டை வெடிக்க வைத்தவர் எனக்கருதப்படும் பெண் தங்கியிருக்கக் கூடிய இடங்களை கண்டு பிடிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாக கொழும்பு தினசரி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## மட்டக்களப்பு

பெரும் சுற்றிவளைப்பு ஒன்றை மேற்கொண்டனர்
இப்பகுதிகளில் தொடர்ந்து இரண்டு நாட்கள் தங்கி நின்ற படையினர் நெல்லிக்காடு கற்குடா வெட்டை ஆகிய பகுதிகளை சேர்ந்த 5 பொதுமக்களைக் கைது செய்து முகாம்களுக்கு கொண்டு சென்றனர்
காத்தமுத்து இறஞ்சன் (18), தங்கவேல் கிருபாகரன் (22), குமாரசாமி உதயகுமார் (18), வீரக்குட்டி சுந்தரலிங்கம் (18), கனகசூரியன் மோகன் (25) ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்


★ நம்பிக்கையின் நட்சத்திரம் ★
எமது வாடிக்கையாளர்கள்,
நண்பர்கள் அனைவருக்கும்
★ எமது உள்ளம் கனிந்த
★ தீபாவளி வாழ்த்துக்கள்!

புதுவிதமான முறையில் சகல விதமான படங்களையும்
பிறேம் செய்ய நாட வேண்டிய ஒரே இடம்.

## நிரூத் படமாடம்

பிரதான வீதி - சாவகச்சேரி

★ கண்ணைக்கவரும் காட்சிப் படங்கள், சுவாமிப்படங்கள்
★ கண்ணாடி வகைகள்
★ காட்போட் சிற்வகைகள்
★ பிறேமிங் கோல்ட் ரேப் வகைகள்
★ றீப்பைகள்

எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

(9955)



அனைவருக்கும் எமது தீபாவளி நல்வாழ்த்துக்கள்!

யாழ் ஸ்ரீதர் அகலத்திரையில்
முல்லை மாவட்ட கலை பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும் இணைந்து வழங்கும்
பொ. தாசனின்

## "இன்னும் ஒரு நாடு"

தினசரி பிற்பகல் 2-30, 4-00, 6-00
சனி, ஞாயிறு காலை 10-30, 2-30, 4-30, 6-30
இன்று தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு
10-30, 2-30, 4-30, 6-30 காட்சிகள் காண்பிக்கப்படும். (சி-10636)


## மரண அறிவித்தல்

### திரு. ஆறுமுகம் கனகசபை

[முன்னாள் ப. நோ. கூ. ச. அல்லாரைக் கிளை முகாமையாளர்]

வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற திரு: திருமதி ஆறுமுகத்தின் மகன் கனகசபை 31-10-94ல் காலமானார். இவர் தெய்வானைப்பிள்ளையின் அன்புக் கணவரும், சந்திரகாந்தி (ஆசிரியை), தவமணிதேவி (ஓய்வுபெற்ற கி.சே.), சாந்தநாயகி (ஆசிரியை), சறோஜாதேவி, சந்தியதேவி (இத்தாலி). திருங்கேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவரத்தினம் (ஓய்வுபெற்ற பாடசாலை அதிபர்), திருவம்பலம், கந்தசாமி, தபோநிதி (ப.நோ.கூ.ச. சாவகச்சேரி), பாலசுந்தரம் (இத்தாலி) ஆகியோரின் மாமனாரும், குகப்பிரகாஷ் பிரணவன் சஞ்சுதா, சஞ்சீவன், சர்மிலன், சரணிதா, பாலஸ்ரீபன், இந்துஷன் ஆகியோரின் பேரனுமாவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் 01-11-94ல் வெள்ளாம் போக்கட்டி, கொடிகாமத்தில் நடைபெற்றது. இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுடன் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சு. க. சிவரத்தினம்

(9954)


தித்திக்கும் தீபாவளி திருநாளில்
நண்பர்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
★ தீபாவளி வாழ்த்துக்கள் ★
புதுமை விரும்பிகள் புன்னகைக்கும் வண்ணம் புத்தம் புது டிசைன்
நகைகளை நித்தம் தருவதில் புகழ்பெற்றவர்கள்

# நியூ லலிதா நகை மாடம்

74|1, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
நங்கையர் நாடும் நாளைய டிசைன் தங்க நகைகளை இன்றே தருபவர்கள், (சி-10634)


இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம்பணிமனையில் 1994-ம் ஆண்டு நவம்பர் மாதம் 02-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது